யாழ்/அளவெட்டி நாகேஸ்வரம்

# ஸ்ரீ நாகவரத நாராயணர்

# பிள்ளைத்தமிழ்


ஆக்கியோன்:

அருட்கவியரசு சி. விநாசித்தம்பிப்புலவர்



வெளியீடு:

ஸ்ரீ நாகவரதநாராயணர் தேவஸ்தானம்

நாகேஸ்வரம் - அளவெட்டி.

1990

பதிப்புரிமையுடையது
முதற்பதிப்பு: ஆனி - 1990 1000 பிரதிகள்

# ஸ்ரீ நாகவரத நாராயணர் பிள்ளைத்தமிழ்

அருட்கவியரசு சீ. விநாசித்தம்பிப் புலவர்

அச்சுப்பதிவு:
பாலா அச்சகம், காரைநகர். போன்: 24

All Rights Reserved;
1st Edition June - 1990

# Sri Nagavaratha Narayanar PILLAITAMIL

*Arudkavi S. Vinasithamby Pulavar*

Printers;
*Bala Printers, Karainagar. Phone: 24*

[பிழை திருத்தம் கடைசிப்பக்கம் தயவுசெய்து கவனிக்கவும்]

# நான்முகம்

கீதை சொன்ன வேத மூலாதார மூர்த்தியாக - எங்கும் நிறைந்த இராமநாத மூர்த்தியாக - எல்லா வடிவுமாகிய மூர்த்தியாக விளங்குபவன் ஸ்ரீமந் நாராயணமூர்த்தி. இந்த மூர்த்தி ஜீவராசிகளுடன் சேர்ந்து திருவிளையாடல் செய்வதற்காக எடுத்துக் கொண்ட திரு அவதாரங்கள் ''ஆய வடிவு பதினாறாயிரம்'' என்பார் வில்லிபுத்தூர் ஆழ்வார். இவற்றுள் மிகப் பிரசித்தமானவை 10 அவதாரங்கள் ஆகும். அவற்றுள் பூமிபாரம் தீர்ப்பதற்கென்று வந்த அவதாரமே கிருஷ்ணாவதாரமாகும். அந்த அவதாரம் தோன்றியதினம் ஆவணி மாதரோகிணி கூடிய அட்டமித் திதி.

இந்தத் தினமே அளவெட்டி நாகேஸ்வரப் பதியில் கோயில் கொண்டருளிய ஸ்ரீ நாகவரத நாராயணர் தேர் உலாவரும் சிறந்த தினம். இந்தப் பெருமானை - திருத்தேரில் காணும்போது அவருடைய அவதாரக் காட்சிகள் அனைத்தையும் அருட்கண்ணால் காணலாம். ஒரு குழந்தை தேரில் புன் சிரிப்புடன் இருப்பது போன்ற காட்சியைக் கண்டேன். அவனைப் பிள்ளைத் தமிழால் பாடவேண்டுமென ஆசை கொண்டு சிந்தித்தேன். சிந்தனைத் தேன் - இந்த நூலாக வளர்ந்தது. வளர்ந்த நூலை ஆண்டவனின் திருவருளில் தோய்த்து - அவனது அடியவர்களாகிய உங்களுக்கு வழங்குகிறேன். பாடிப்பரவிப் பகவானின் பாதமலரை உங்கள் இதயமலரில் பதிப்பீர்களாக.

இந்நூலை வியந்து சிறப்புரைகள் வழங்கிய திருநிறை செல்வர்கள்: நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், தவத்திரு நா. முத்தையா, சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, நம - சிவப்பிரகாசம். எம். ஏ. கந்தையா அனைவருக்கும், இதனை மிகச் சிறப்புற அச்சிட்டுதவிய காரைநகர் பாலா அச்சகத்தாருக்கும் என்றென்றும் கடமைப்பாடுடையேனாகி மனங்கனிந்த நன்றி கூறி வாழ்த்துகின்றேன்.

அன்புவணக்கம்

இங்ஙனம்
அருட்கவியரசு, சி. விநாசித்தம்பி
ஆக்கியோன்

யாழ்ப்பாணம் - நல்லூர்

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

# ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்

வழங்கிய

# ஆசியுரை

பேரன்புமிக்க பெருந்தகையீர்!

நாரம் என்றால் அன்பு. அயனம் என்றால் உறைவிடம். எனவே அன்புக்கே உறைவிடமான, ஸ்ரீ நாகவரத நாராயணர் பிள்ளைத் தமிழ் பிரதியைக் கண்ணுற்றோம். இதனை அருட்கவி திரு. சீ. விநாசித்தம்பி புலவர் அவர்கள் யாத்து சைவ உலகு உய்ய உவந்தளித்துள்ளார்கள். பிள்ளைத் தமிழ் பாடும் கவிவன்மை எல்லோருக்கும் எளிதாக அமைவதொன்றன்று. ஸ்ரீ நாகவரத நாராயணப் பெருமானின் கருணை மழை முன்நின்று பொழிய அருட்கவி அவர்கள் தமக்கே உரித்தான பக்திரசம், சொல்வண்மை, ஓசை நயம், சந்தச்சிறப்பு ஆகியன குதி கொள்ள யாத்துள்ளமை பாராட்டுக்குரியது. மேலும் கண்ணபிரானின் புகழ் உரைக்கும் புராண இதிகாச சரிதைகளையும் சுருங்க உள்ளடக்கி விஷ்ணுபக்தர்கள் போற்றிப் பாராயணம் செய்யும் வகையில் இலகு நற்றமிழ் நடையில் யாத்துள்ளார்கள்.

அருட்கவி அவர்கள் நலமே நீடு வாழ்ந்து இன்னோரன்ன பக்திப் பனுவல்களை மேன் மேலும்

யாத்தளிக்க வேண்டுமென பரந்தாமன் பாத கமலங்களை உளமார இறைஞ்சி எமது 'நல்லாசிகளை வழங்குகிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிகள்

"ஆத்மஜோதி" கௌரவ ஆசிரியர்

தவத்திரு நா. முத்தையா அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

அருட்கவியரசு உயர்திரு சி. விநாசித்தம்பி புலவர் அவர்கள் எங்கள் குடும்பத்துடன் நீண்ட காலத் தொடர்புடையவர்கள். அடியேனுடைய இளவல் அமரர் நா. அருமைநாயகம் அவர்கள் தனக்கு ஏதாவது பிரச்சினைகள் ஏற்படும்போது, நாவலப்பிட்டியிலிருந்து அளவெட்டிக்கு வந்து அருட்கவி அரசு அவர்களைச் சந்தித்து ஆறுதல் பெற்றுக்கொண்டு வருவார்.

பண்டிதமணி அவர்களிடம் அடியேன் அடிக்கடி செல்வதுண்டு. ஒருமுறை அருட்கவி அரசு அவர்களைப் பற்றிய பேச்சு வந்தபோது, "அளவெட்டி விநாசித்தம்பியரிடம் ஒரு சக்தி இருக்குது காணும். ஆனல் அது எவ்விதமானது என்றுதான் என்னல் கூறமுடியவில்லை" என்ருர்கள். நாங்கள் இருவருமே பண்டிதமணி அவர்களுடைய மாணவர்கள்தான்.

அருட்கவி என்ருலும் வரகவி என்ருலும் ஒரு பொருட் சொற்கள்தாம். இவருடைய பாடல்கள் பலவற்றை அடியேன் விருப்புடன் படித்ததுண்டு; படிப்பதுண்டு. எல்லோரும் இலகுவில் பொருள் விளங்கிக் கொள்ளும் ஜனரஞ்சகமான பாடலாய மைந்திருப்பதோடு பக்திச்சுவை சொட்டும் பாடல்களாயும் அமைந்தவையாகும்.

தெய்வத்தைக் குழந்தைகளாக்கியும் பெரியார்களைக் குழந்தைகளாக்கியும் பிள்ளைத்தமிழ் பாடும் மரபு தமிழில் உண்டு. அந்தவகையில் ஸ்ரீ நாக வரத நாராயணர்மீது புலவர் அவர்கள் பாடிய பிள்ளைத் தமிழ் மிகத் தனிச்சிறப்பு வாய்ந்தது. காப்புப் பருவத்தில் முதலாவது பாட்டில் முதலாவது வரியில் ''ஓங்கார ஆனைமுக ஞானமுதலே'' என்ற பகுதியில் விநாயகப்பெருமானுடைய எல்லா இலட்சணங்களுமே அமைந்துள்ளன. இப்படி எந்தப் பருவத்தில் எந்தப்பகுதியில் எந்தவரியில் எந்தச் சொல்லை எடுத்தாலும் சொல்லுக்குச்சொல் தித்திப்பதை யாரும் உணரலாம். வீடுதோறும் ஒவ்வொரு புத்தகம் இருப்பின் அதனுள்ளே கண்ணன் இருப்பதை யாரும் உணரலாம்.

ஆத்மஜோதி நா. முத்தையா

உ

தேவி துணை

நெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவர்

சிவத்தமிழ்ச் செல்வி, துர்க்கா துரந்தரி, பண்டிதை

செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

வழங்கிய

# ஆசியுரை

அருட்கவி சீ. விநாசித்தம்பிப் புலவர் அவர்களின் பாடல்கள் ஆண்டாண்டு காலமாக எம்மால் பாராட்டப்படுபவை; மகிழ்ந்து படிப்பவை; தற்போது ''நாகவரத நாராயணர் பிள்ளைத் தமிழ்'' வெளிவருகிறது. இந்நூலை அழகுற அச்சிட்டுதவும் பாலா அச்சகத்தாருக்கும் அருட்கவி ஐயா அவர்களுக்கும் அடியேனது வாழ்த்து உரித்தாகுக.

தங்கம்மா அப்பாக்குட்டி

உ
சிவமயம்

காரைநகர் - பயிரிக்கூடல்

**அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோவில்**

பரிபாலகரும்,

ஓய்வுபெற்ற அதிபருமான

**திரு. எம். ஏ. கந்தையா *J. P* அவர்கள்**

வழங்கிய

# அணிந்துரை

அருட்கவி அரசு விநாசித்தம்பிப் புலவர் பல அருட் கவிகள் பாடியுள்ளார். இறைவன் பேரில் பாடுவதில் மிகத் தனித்துவம் உடையவர். பிள்ளைத் தமிழ் பாடுவதிலும், உருகி உருகி மெய்யரும்பப் பாடுவதிலும் ஒப்பற்ற அருளாட்சி படைத்தவர். துர்க்காதேவி பெயரில் முருகன் பெயரில் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். காரைநகர் பயரிக் கூடலில் எழுந்தருளி அருள் பாலிக்கும் சுப்பிரமணிய சுவாமி மேல் பாடிய பிள்ளைத்தமிழ் அண்மையில் பேரறிஞர் மத்தியில் அரங்கேற்றம் பெற்றது. அந்நூலைப் படித்த அறிஞர் அந்நூல் அருட்திறத்தால் உந்தப் பெற்றுப் பாடப்பெற்ற அருள் நூலாம் பரிசைப் பெரிதும் உணர்ந்தனர். பாராட்டினர். அதனால் அத்தேவஸ்தானத்திலே அருட்கவிக்கு அருட்கவிஅரசு என்னும் விருதினை அத் தேவஸ்தான சார்பில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் வழங்கி அருளினார்கள். அருட்கவி ஆதரித்து வரும் நாகவரத நாராயணன் பேரில் இப்போது பிள்ளைத்தமிழ் ஒன்று படைத்துள்ளார். அதைப் படிக்கும் தோறும் முற்கூறிய பண்புகள் இன்னும் மேலாகப் பரிமணிக்கக் காணலாம். அந்நூலிற் பயின்று வரும் சொல், பொருள், நடைமுதல் எல்லாம் வற்றாத திருவருள் ஊற்றிலிருந்து பிரவாகித்து திருவருட் பிரசாதமாய் பெருக்கெடுத்து கற்குமடியார்க்கு பெருவிருந்தாயமையக் கண்டு பெருமிதமடையலாம்.

''கவலையுறு வேளையில் கண்ணு எனப் போற்றக் கனிந்த
வாய் மலர்ந்து சிரித்து
கடையேன் உளங் குளிர கண்குளிரக் கைகாட்டிக் களிப்
பருளும் குழந்தைக் கள்வா''

எனவும்

பாதகம் பல செய்த கொடும்பாவியாயினும் படுகுழியில்
விழுந்த மகனைப்
பாராத தந்தை தாய் உண்டோ முகந்தனே
பட்ட துயர் தீர்க்க வந்தோம்

எனவும் இறைவனை ஈர்க்கும் பாங்கு சுவைத்தற்குரியது.

நூல் பாடும் அகநோக்கு மிக மிகவிழுமியதாக மக்களின் ஈடேற்றத்தை மையமாகக் கொண்டிருத்தல் கவிமரபு. ஐம்புல வேடரின் வலைக்குட்பட்டு மூவாசைப் புயலிலே சுழன்று பொருள் அல்லாதவற்றைப் பொருளாகக் கொள்ளும் பேதமை நிரம்பிய சீவாத்மாக்களை நன்னெறிப்படுத்தும் அகப் பசி ஒன்று கவியை வாட்டுவதும், அப் புன்னெறிகளினின்று விலக மக்களுக்கருள் புரியுமாறு இரந்து நிற்கின்ற தன்மையும் அம்மானுடரின் ஈடேற்றம் பற்றிய விசாலமும் கவியின் மனத்தில் ஊடுருவி நிற்கும் நிலையையும் நூலிற் பரக்கக் காணலாம்.

''யாதானும் நாடாமல் ஊராமல்''

என்ற ஆழ்ந்தகன்ற சிந்தையினால் உந்தப் பெற்றுச் ''சேரவாரும் சகத்தீரே'' என்று சுந்தரன் கூவியழைக்கும் பாங்கிலே பிள்ளைத்தமிழ்க் கவிகள் பல ஓங்கிநிற்கக் காணலாம்.

''சொற் பொருளறியாப் படைவீரர்
பற்பல கொடுமைகள் எமக்கிழைக்கப்
பார்த்தும் பாராக் கள்வன் நீ''

என்றித்தகைய குறிப்புக்களால் நாடு நலம் பெறு சிந்தை ஒன்று அவருள்ளத்தடித்தளத்தில் இருந்தெழுந்து அவரின் நாட்டுப் பற்றை வெளிப்படுத்தும்.

''இராவணன் ஆயுதமிலாது நிற்க
அஞ்சிடாய் இன்று போய் நாளை வா
என்று புகல் ஆதிப்பெருந்தகை நாயகர்''

என்ற குறிப்பும் பிறவும் நாகவரத நாராயணனின் அவதாரமே இராமபிரான் என்று அறிவிப்பதோடு பேராண்மை மிக்க இராமபிரானின் ஊராண்மை அதாவது பகைவன் நலிந்தவிடத்து உபகாரியாந் தன்மையும் பேசப்படுகின்றது.

மேலும் பெரியார்கள் ஞானிகள் எல்லாரும் தமக்காக அன்றி உலகம் உய்யவே நூல்களைப் படைத்து இறைவனை வேண்டி நிற்கும் தன்மை இந்நூலாசிரியரிடத்து அமைவதை நூலிற் பரக்கக் காண்பதோடு தன்னை நாயடியேன் கடையேன் என்ற எளிமையும் தோன்றும்.

கூர்ந்து நோக்குங் கால் இந்நூல் ஒரு பக்திநூலாகவும் இறைவன் புகழைப் பாடும் தோறும் உயிர்களின் ஆத்ம ஈடேற்றும் நோக்கங் கொண்ட நூலாகவும், சொன்னயம், பொருணயம், அணிநயம் அலங்கரிக்கும் நூலாகவும் ஆசிரியரின் அகநோக்கு குறைவிலாது உயிர்கள் வாழவேண்டுமென்பதும், நூலாசிரியர் பெரும்புலவர் வரிசையில் வைத்தெண்ணத்தக்கவர் என்பதும், இந்நூல் உயர்ந்த பிரபந்த வரிசையில் விளங்கத் தக்கதும் ஆகிய எல்லாம் புலப்படுத்தி நிற்கக் கண்டு மகிழலாம்.

சீ. வி அவர்கள் பக்தி நூலாசிரியராவதோடு சைவப் பிரசாரகராகவும் கதாப்பிரசங்கியாகவும் மிளிர்கின்றார்.

எனவே நாவலருக்குப் பின் யார் என்ற வினாவுக்கு விடையாக சி. வை தாமோதரம்பிள்ளை, பொன்னம்பல பிள்ளை, இலக்கிய கலாநிதி கணபதிப்பிள்ளை முதலாம் பேரறிஞர்களோடு அருட்கவியரசு சீ. வி. அவர்களையும் இனி வரும் வரலாற்றாசிரியர் வைத்தெண்ணினால் வியப்பேதுமில்லை. அன்னார் வாழ்நாள் மாவலியாற்று மணலிலும் பலவாகி சைவமும் தமிழும் பரவ மேலும் உழைக்க இறைவன் திருவருளை வேண்டி வாழ்த்தி அமைகின்றோம்

சுபம்

எம். ஏ. கந்தையா *J. P*

உ
சிவமயம்

# ஆசி அணி

### வெண்பா

நாழிகைக் கோர்பாவும், நாளுக் கொருநூலும்
வாழிக மானுடர்க்கு மன்னவைத்து, - ஆழிகைக்
கண்ணனுக் காளாய்க், கடுந்தவம் காக்குஞ், சொல்
வண்ணன், அருட்கவிக்கோ மான்.

மனோசத்தி யோகசு வாமியருள் மேலா
க நாசித்தி யூக கவிபோ — விநாசித்தம்
பிக்கோர் பெருந்தவப் பேறே, கலையுல
குக்கோ, பிராமி கொடை

தெள்ளு மொழியிலெழு தீஞ்சுவைப் பேரின்பு
கொள்ள அருட்பாக் கொடைநா, இப் — பிள்ளைத்
தமிழால்நா ராயணரைத் தாலாட்டுஞ் செஞ்சொல்
அமிழ்தோர்நி வேதரும் ஆம்

பாராய ணஞ்செய்யப், பண்ணோர்பிள் ளைத்தமிழ்
நாராய ணர்பாலூர் நாகமெழும், — சீராயங்
காடும், அருட்கவி யாரமுதப் பாலுணும், கை
கூடும் அமைதிஉல குக்கு

நம - சிவப்பிரகாசம்
''இறை ஒளி''

# பொருளடக்கம்


I நான்முகம்
II ஆசியுரைகள்
III அணிந்துரை
IV ஆசிஅணி

| | பக்கம் |
|---|---|
| முதல் வணக்கம் | 01 |
| 1) காப்புப் பருவம் | 03 |
| 2) செங்கீரைப் பருவம் | 09 |
| 3) தாலப் பருவம் | 15 |
| 4) சப்பாணிப் பருவம் | 21 |
| 5) முத்தப் பருவம் | 27 |
| 6) வருகைப் பருவம் | 33 |
| 7) அம்புலிப் பருவம் | 39 |
| 8) உறிதிருடு பருவம் | 43 |
| 9) சிறுபறைப் பருவம் | 47 |
| 10) சிறுதேர்ப் பருவம் | 53 |

# முதல் வணக்கம்

## ஸ்ரீ செல்வ விநாயகர்

செல்வவி நாயகன் திருமுறை நாயகன்
சொல்வளர் செந்தமிழ் சுரந்திடு புண்ணியன்
நல்வளம் தந்திடும் நாரணன் மருமகன்
வல்விக்கி னேஸ்வரன் மலரடி போற்றுவாம்

## ஸ்ரீ சொர்ணலிங்கேசன்

வெள்ளை எருதினில் வீற்றிருக் கும்தலை
துள்ளும் பன்னக சொர்ணலிங் கேஸ்வரா
கள்ளன் காமுகன் கபடனென் றென்னையிங்
கெள்ளி டாதருள் இணைமலர்ப் பாதமே

## ஸ்ரீ சொர்ண மனோன்மணி

நற்றவத் தோரகம் நண்ணிடு வாய்புவி
பெற்றனை கண்ணனின் பிள்ளைத் தமிழ்சொல
உற்றிடு மோர்துணை உனையன் றியாருளர்
மற்றவர் கண்டிடா மனோன்மணி யம்மையே

## ஸ்ரீ நாகவரதர்

அச்சு தாஅரங் காவர தேஸ்வரா
பச்சைக் குழந்தைப் பருவத்தின் நின்புகழ்
இச்சை கொண்டவா றிசைத்திட வைத்தவா
உச்சி சூடினேன் உனதடிச் செல்வமே

## ஸ்ரீ முருகன்

செந்தில் மேவிய சித்திர வேலனே
வந்த ஊனத்திடும் மாதுலன் நாரணன்
கந்த மார்தமிழ்க் கவித்தொடை பாடிடத்
தந்து காத்தருள் தாமரைப் பாதமே

## ஸ்ரீ சரஸ்வதி

வாணி சரஸ்வதி வாக்கருள் நாயகி
பேணும் நான்மறை பேசும் தயாபரி
காணும் பேதையேன் கன்ஞவி லும்வைத்துப்
பூணும் கவிசொல்லும் பொன்னடி போற்றினேன்

## அருட்கனி உண்பார்கள்

வண்ணனும் ஆதி நாக வரதநா ராயணன்தன்
தண்ணருள் பெருகும் பின்னைத் தமிழ்க்கவி மாலை
யாக்க
புண்ணியம் என்செய் தேனோ? புகுந்தருள் புரிந்
தாள் வாணி
கண்ணிய மனம்படைத்தோர் கற்றருட் கனியுண்
பாரே

— ஆக்கியோன்

உ

## ஸ்ரீ நாகவரத நாராயணர்

# பிள்ளைத் தமிழ்

## — காப்புப் பருவம் —

### செல்வ விநாயகர்

அருளுருவ னேவிக்கி னேஸ்வரா ஓங்கார
    ஆனைமுக ஞானமுதலே
அப்பனே அப்பனின் தேர்க்கா லிறுத்தவா
    அபிராமகௌரி சுதனே
திரளுமுப் பழமப்ப வகைபாகு தெங்குபால்
    தேன்படைத் தேத்துவார்க்கு
சித்தநிறை இனிதெலாம் நித்தியம் தந்திடும்
    செல்வக் கணேசநாதா
பரவுகுண வடியவர்க் கெளியபரந் தாமனிரு
    பாம்புருவமாய் நடித்துப்
பயிலளவை தென்பகுதி நாகேஸ்வ ரப்பதியில்
    பயன்பூத்த கோயில் கொண்ட
வரதநா ராயணன் மலர்மகள் புவிமகள்
    மருவும் மஞ்ஞளசீலன்
மகிழ்வுறும் நற்பிள்ளைத் தமிழ்வரையத் தமிய
    மனம்நின்று காத்தருள்கவே. னேன்

## ஸ்ரீ சொர்ணலிங்கேசன்

கங்கையொடு மதியரவு பொங்குசடை யாவெள்
காளைமிசை யேறுமரனே (ளைக்
கற்பகச் செல்விஉமை சிற்பரா னந்த சிலை
கனகநா யகி நாதனே
தங்குபொன் னம்பலஅ ரங்கிலே தாள்தூக்கித்
தாண்டவம் செய்யும் சிவனே
தனிக்குழவி யௌவனன் விருத்தனென் றுடல்
சங்கரா சொர்ணலிங்கா (செயும்
சங்குசக் கர மேந்திச் சர்ப்பத்தி லேயாடித்
தயிர் வெண்ணெய் உறிகள் திருடி
தந்திமுகன் அறுமுகன் தங்கை மஞ்ஞேன்மணி
சார்ந்ததெய் வங்களுடனே
செங்கடம் பலர் சொரிய சேணுயர் கோபுரம்
தினகரன் வருகை காட்டும்
திருக்கோயிலுறை கண்ணன் வருபிள்ளைத் தமிழுக்
சேவடித் ஆணைதருகவே (குச்

## ஸ்ரீ சொர்ண மஞ்ஞேன்மணியம்மை

அன்னபரி பூரணி அகிலாண்ட நாயகி
அங்கயற் கண்ணி விமலி
அறுபத்து நான்குவிளை யாடல்கொண் டணிமது
ஆண்டுசெங் கோல்பிடித்த (ரை
கன்னிகா மாட்சியே அறம்பூத்துத் தவஞ்செய்த
கற்பகாம் பிகையன்னையே
கண்ணுக்கு மணியாகி கனிநாவில் சொல்லாகிக்
கருத்திலே ஒளிவிளக்காய்
என்னையறி யாமலே இழிவுபுரி நாயேனை
இரட்சித்த தியாக மலையே

எண்ணுவார் எண்ணமாய் வருசொர்ண மனோன்
இறைவியே கருணைமுகிலே (மணி
உன்னைத்தங் கைச்சியென உருகியழைக் குங்
ஊதுகுழல் கொண்ட பகவன் (கண்ணன்
ஓங்குபின் னைத்தமிழுக் குதவுகற் பகமாக
உவந்துகண் ணருள்புரிகவே

## கலைமகள்

அங்கையினில் ஆரணமும் சங்கீத வீணையும்
அக்கைமணி மாலையுங்கொண்
டடியார்கள் காணுமொரு ஞான மயிலசைந்தாட
அறுபத்து நான்குவிதமாய்
தங்குகலை மழைபொழிந் தணிதரள வடமிளிர
சாத்வீக வெள்ளையாடை
தனிவண்ண மதிமேனி திவளவெண் டாமரைத்
தவிசினி லிருக்கும் தாயே
பங்கயன் நாவிருந் துணர்மறைப் பொருள்பேசும்
பாரதி கலாவாணியே
பார்பூத்த நின்மாமன் பணிபூத்த தவராமன்
பார்க்கரிய நெடிய வாமன்
சிங்கமாய் இரணியன் திண்மார்பி டந்தவன்
தெளிகீதை சொன்ன வாயன்
சிறந்தநா கேஸ்வரக் கண்ணனின் தமிழ்க்கவி
செழிக்கநின் கழல் தருகவே

## ஸ்ரீ முத்துமாரி

ஆரணி பராசத்தி ஆடல்மிகு சாம்பவி
அரியேறு கன்னி ஜனனீ
அண்டிவரு தொண்டர்கள் கொண்டவினை தீர்த்
அமிர்தநா யகிகுமாரி (திடும்

வீரபர மேஸ்வரி வேம்புநிழற் பூங்கோயில்
வீற்றிருந் தருளுமழகி
விமலனார் அருள்வேண்டி விண்ணுயர் கம்பத்தில்
மிகுதவ மிருந்த நடனி
பூரணப் பொன்மதியை அமாவாசை யிற்காட்டும்
பொற்றோ டெறிந்த தாயே
பொலிபிரம் போடுதுடி வாளேந்திக் கரகமுறை
புகழ்முத்து மாரியம்மா
நாரணன் நாகத்தி லாடும்வர தேஸ்வரன்
நட்டாழி பள்ளி கொள்வோன்
நற்பிள்ளைத் தமிழுக்குச் சொற்பொருட் சுவை
நயந்துகாத் தருள்பொழிகவே. (நல்கி

## ஸ்ரீ அரிகரபுத்திரர்

வேறு

வெள்ளானை மீதிலிருந் தவனிபெல்லாம்
வேதநெறி காத்தருளும் வீர மூர்த்தி
மின்னனையார் பூரணைபுட் கலையி னோடு
வேண்டுமடி யார்க்கருளும் தேவ தேவா
கள்ளாரும் மலர்க்குழலி இந்தி ராணி
கண் சிந்திப் புலம்புகையில் அபயந் தந்த
காவலனே அரனும் அரியும் பெற்ற
கருணைமக னேகையில் செண்டு கொண்டு
புள்ளேறும் அயனெழுத்தை புதுக்கி அன்பர்
பொல்லாத மலமழுந்தாப் போக்கு நல்கும்
புண்ணியனே எண்ணரிய வடிவத்தானே
போற்றவரு மணிகண்டன் ஐயன் சாஸ்தன்
உள்ளூறும் பகவேசன் எனத் துதிக்கும்
உத்தமனே அளவைநா கேஸ்வ ரத்தில்

உறைகண்ண பிரான்பிள்ளைத் தமிழியம்ப
உனதுதிரு வருள்புரிந்து நிற்பாய்காப்பே

## ஸ்ரீ வீரபத்திரர்

அண்டமுகட திர்ந்திடும் அம்புயப் பதச்சிலம்
பதிர ஆடும் இறைவனே ஆதிசிவனின் மைந்தனே
மிண்டி நின்ற தக்கனின் விரிசிரந்து ணித்தவன்
விரவுதகரின் தலைபெற வீரநடனம் செய்தவா
தொண்டுநெஞ்சர் காவலா சோதிபத்ர காளியை
துணையாக்கி உலகெலாம் துன்பநீங்க நின்றவா
பண்டுரங்கன் கோகுலம் பாலும்தயிரு முண்டவன்
பகவன்பிள்ளைத் தமிழ்சொலப் பாதந்தந்து காக்கவே

## ஸ்ரீ வைரவமூர்த்தி

சூலமுடுக்குப் பாசம்வாள் துலங்குகரத்தில் தாங்கி நீள்
சுடரும்மகுடச் சடையலை தொடருந்திசைகள் பயிலவே
ஆலமுண்ட கண்டனாய் அழகொடாலங் காட்டிலே
ஆதிகாளி நாணுற அமர்ந்தமுனிவர் காணுற
ஞால மேத்தும் ஊர்த்துவ நடனமாடி வென்றவா
நம்புமேழை யடியரை நாடிக்காக்கும் நாயகா
நீலவண்ண மாயவன் நெடியவேங்க டத்தவன்
நிலவுபிள்ளைத் தமிழ்வர நெஞ்சினிலிரு காக்கவே.

## பிரமதேவர்

ஆரணம் விரிக்கும் மூர்த்தி அரங்கனின் உதரப் பூவில்
அதிசய மாயுதித்த அயனெனும் படைப்பு மூர்த்தி
பேரணி அன்னமேறிப் பிறவிகள் வினை யளந்து
பிணிப்புறு சென்மம்நல்கும் பிரமனைப் பணிதல் செய்வாம்

நாரணன் உயிரைக்காக்கும் நாயகன் மேலை மார்பன்
நவிலரு மனந்தகோடி நாடக நடிப்புக் காரன்
தாரணி ஆழ்வார்பாடும் தமிழ்நயந் தவர்பின் செல்ரேன்
தலையசைத் துவக்கும்பிள்ளைத் தமிழ்நலம் பெருக நன்றே

## ஸ்ரீ துர்க்கையம்மை

எங்கும் பரந்துமுது திங்களின் வதனமும்
    இரட்சிக்கும் விழிமலர்களும்
எழுகோடி சூரியப் பிரகாசச் சடைகளும்
    இசைவரக் கைகள் பத்தும்
சிங்கமீ துல்லாச மங்களத் தோற்றமும்
    திருநடன மாடுகழலும்
திமிரமகு டாசுரனை வென்றவிரு துப் பொலிவும்
    சிறியனேன் காணவருவாய்
பொங்குபா லாழிதனை மலைமத்தி னுற்கடையும்
    போதுநின் கருணைபெற்ற
பூபாலன் புண்ணியன் எமகாலன் தனைச்சரண்
    புகுமடியர் குறை தீர்ப்பவன்
சங்கிசை விருப்பினன் சர்ப்பச் சிரத்தேறிச்
    சந்தான சௌபாக்கியம்
தருபவன் நாகேஸ்வ ரத்திலுறை பவன்பிள்ளைத்
    தமிழ்மாலை தனைக்காக்கவே

## 2. செங்கீரைப் பருவம்

நிறைவான நெஞ்சினர் நித்தியங் கண்டுருகும்
    நீலவண் ணமுகுந்தா
நிரஞ்சனி பராசக்தி நீலியுமை கல்யாணி
    நிமலி பார்வதி சாம்பவி
முறைபேசு மண்ணனென முக்கண்ணன் முதலாய
    மூர்த்திக ளுவந்தழைக்கும்
முரளீதரா உலகிற் பிறவாமற் பிறந்து மறை
    மொழிந்த ஹரி ராமக்கிருஷ்ணா
நறைதுளசி கொண்டு தமிழ் நாலா யிரப்பதிகம்
    நாவூறிப் பாடுவார்க்கு
நன்னெறி கொடுத்தினிய ஞானவா ரியையருளும்
    நந்தகோ விந்த நாதா
சிறைவண்டு பாடுமலர் திருவடி யசைத் தினிது
    செங்கீரை யாடியருளே
திகழுநா கேஸ்வரம் பயில்வரத நாரணா
    செங்கீரை யாடியருளே

புவனங்க ளெங்கணும் நின்வடிவ மென்கின்ற
    பொருளினைத் தெளியு மாறு
பொன்னீல மேனியுங் விந்தென்ற திகிரியும்
    பொழிநாத மானசங்கும்
திவளுமுயர் கலையென்ற சப்தகானக் குழலும்
    செப்புநான் மார்க்கமென்னும்

சித்திதர நான்கங்கம் செந்துவர் வண்ணமும்
சேர்ந்தழகு குளிரும் முகிலே
கலேயுறு வேஊயில் கண்ணு எனப் போற்றக்
கனிந்தவாய் மலர்ந்து சிரித்து
கடையேன் உளங்குளிர கண்குளிரக் கைகாட்டிக்
களிப்பருளும் குழந்தைக் கள்வா
சிவனயன் முதலாய தெய்வீக வண்ணனே
செங்கீரை யாடி யருளே
திகழும்நா கேஸ்வரம் பயில்வரத நாரணு
செங்கீரை யாடி யருளே

அப்பனே முப்பத்து முக்கோடி தேவர்களும்
அறு நான்கிரண் டாயிரம்
ஆயமுனி வருமேத்தும் ஆதியரங் கேசனே
ஆலிலே துயின்ற மாலே
ஒப்பரிய வசுதேவன் தேவகிவ யிற்றிலே
உதித்தளட் டாங்கருவென
உயர்திங்கள் ஆவணியு ரோகிணியொ டட்டமியில்
ஓங்கிருட் சிறையகத்தே
இப்புவியில் வந்தவ தரித்திடையர் கோகுலத்
தெழிலார் யசோதை மகனுய்
இசையாதி சேடனெனும் பலராமன் முதலாய
இளைஞருடன் ஆடிப்பாடி
செப்பரிய அற்புதம் செய்தகோ பாலனே
செங்கீரை யாடி யருளே
திகழுநா கேஸ்வரம் பயில்வரத நாரணு
செங்கீரை யாடி யருளே

அம்மாஅம் மாவென்று பசுவினங் கன்றழைத்
தருகூட்டும் காட்சிகண்டும்
அலங்காரக் கோபியர் கலங்காமற் றயிர்கடையும்
ஆனந்த நிலைமை கண்டும்
கும்மாளம் போட்டாடும் குரவைத் திருக்கூத்தின்
குறிப்பான சுவை நயந்தும்
கோலமிட் டன்புடன் சாலவழு திட்டடியர்
கூட்டத்தை உபசரிப்பார்
தம்மா தவங்கண்டும் சலியாத இல்லறம்
தாங்குவார் பண்புகண்டும்
தானமிகு தருமநெறி பேணுவார் கொடைகண்டும்
சாலிவளர் சீலங்கண்டும்
செம்மா மலர்க்கரும் பூறும்வாய்ப் பாலனே
செங்கீரை யாடி யருளே
திகழும்நா கேஸ்வரம் பயில்வரத நாரணு
செங்கீரை யாடி யருளே

கற்றைச் சடைக்குநெய் பூசிவா சனையூட்டிக்
கட்டியொன் றுய்க் குவித்துக்
கதிருச்சி முடியாக்கிக் கனகாம் பரந்துளசி
கடிகமழும் மாலை புனைந்து
நெற்றியில் சுட்டியும் நீள்செவியில் குழைகளும்
நெஞ்சிலே கௌத்வ மணியும்
நித்திலக் கடகமும் நிரைத்தகணை யாழியும்
நின்றொலிக் குஞ்சதங்கையும்
உற்றபீ தாம்பரமும் ஊட்டும் யசோதையெழில்
ஒழுக அலங்கரித் தெங்களின்
ஓவியத் தலைவ, முது கோவலா வருகஎன
ஒண்கரம் நீட்டியழைக்கச்

சிற்றடி யசைத்துவரும் பச்சைக் குழந்தையே
செங்கீரை யாடி யருளே
திகழும்நா கேஸ்வரம் பயில்வரத நாரணா
செழுங்கீரை யாடி யருளே

எண்ணரிய புவனங்கள் விண்ணிலவு மண்டலங்கள்
இலங்கும் சரா சரங்கள்
இரவிமுதல் நவகோளர் எண்டிசைக்கதிபர்கள்
இமையவர் முனிவர் கூட்டம்
தண்ணரும் செய்யுமைம் பூதங்கள் வேதங்கள்
சாற்றுமா கமங்கள் விதிகள்
சைவநெறி முதலாறு சமயபேதங்கள் இவை
தலைகொண்டசைந்து பொலிய
கண்ணசைத் திருசெவிக் குழையசைத் துச்சியின்
கனகமலர் மாலையசைத்து
காலசைத் திருகர மசைத்துமண் ணசைத் துந்திக்
கமழ்மேனி யசைக்கும் துரையே
தெண்ணிலவு முல்லைமலர் கொவ்வைச்செவ் வாய
செங்கீரை யாடி யருளே (னே
திகழும்நா கேஸ்வரம் பயில்வரத நாரணா
செங்கீரை யாடி யருளே

கருணையே வடிவான வெங்கடாசலம்பிள்ளை
கட்டுமணைச் சேதுப்பிள்ளை
காக்கும் தொழிற்பிள்ளை கற்பனைக் கெட்டாத
காலங் கடந்தபிள்ளை
கருடவா கனமேறும் பெருமா ளெனும்பிள்ளை
கம்சனை யழித்தபிள்ளை
கன்னிய ருருக்குமணி சத்தியபா மாதமைக்
கருதிமணம் புரிந்தபிள்ளை

தருமமிகு பசுவளரும் தலமெலாம் சக்கரம்
சங்குமலர் தண்டுகொண்டு
தவழ்ந்துவிளை யாடிடும் தமிழ்ப்பிள்ளை வெற்றி
சாரங்க பாணிப்பிள்ளை (வளர்
திருவடிவைத் தொருகல்லைப் பெண்ணாக்கும் பிள்
செங்கீரை யாடி யருளே (ளையே
திகழும்நா கேஸ்வரம் பயில்வரத நாரணா
செங்கீரை யாடி யருளே

கீதையமு தஞ்சொன்ன கிருஷ்ணாநின் வேய்ங்
கேட்டுனைக் காண்பதற்குக் (குழல்
கிரியாறு வாரிவனம் தாண்டிநீள் முள்ளுகல்
கிழிக்க வழி நடந்துவந்தோம்
போதனை பெருதோர்க்கும் புருஷோத்த மாநினது
பூவடித் தேன்சுவைக்கும்
பொருளுதவு வாயென்றுன் ஆழ்வார்கள் வாய்
புகன்றதை நினைந்து வந்தோம் (மொழிகள்
பாதகம் பலசெய்த கொடும்பாவி யாயினும்
படுகுழியில் வீழுந்த மகனைப்
பாராத தந்தைதாய் உண்டோ முகுந்தனே
பட்டதுயர் தீர்க்கவந்தோம்
சீதமிகு மயோத்திதரு ஜெகந்நாத ராமனே
செங்கீரை யாடி யருளே
திகழும்நா கேஸ்வரம் பயில்வரத நாரணா
செங்கீரை யாடி யருளே

பெருமாரி சுழலோடு பெருகுநட் டாழியில்
பெயர்ந்தலைப் பட்டலம்பும்
பிளவுறு மரக்கலத் தறிநின்ற காகமாய்ப்
பேதுற்ற அடியேங்களின்

வருமாயை வழிநீக்கி வாரிமண லாம்பிறவி
மலையாது காத்துஞான
மலையேற வைக்குமுயர் கலைநாய கா இமய
மலையாளுக் கொருதமையனே
உருவா யிரங்கோடி கோடிகொண் டுலகெலாம்
ஓங்குசம யங்கள் பலவும்
ஒன்றென்று பரமேசன் ஒன்றென்று மருளிருளை
ஓட்டுமேழ் கதிர்ஞாயிறே
திருமாதைப் புவிமாதை இருபாகங் கொண்டவா
செங்கீரை யாடி யருளே
திகழும்நா கேஸ்வரம் பயில்வரத நாரணா
செங்கீரை யாடி யருளே

அகமென்ற வயலிலே அறிவென்ற விதைவிதைத்
தன்பென்ற கங்கை பாய்ச்சி
ஐந்துபுல னணைகட்டி அபசாரக் களைநீக்கி
அறுவகைக் குறைகளென்னும்
இகலதிக பறவைகலைத் திரவுபகல் கண்விழித்
திருந்துகாத் தெடுத்த கதிரை
இனியசிவப் பாகாக்கி இனிப்பிறப்பில் லாதமருந்
தீதுவென்று தருமிறைவனே
அகரமுத லட்சர மணைத்துமாய்க் கோணங்கள்
அடங்கலும் நிறைந்த பொருளே
ஆராய்ந்து பகரரிய அந்தாதி யில்லாத
ஐயனே மைவண்ணனே
செகமகிழும் காழிச்சீ ராமவிண் ணகரனே
செங்கீரை யாடி யருளே
திகழும்நா கேஸ்வரம் பயில்வரத நாரணா
செங்கீரை யாடி யருளே

## 3. தாலப் பருவம்

வேதத் துச்சித் தத்துவங்கள்
விளக்கும் பிரணவ மணித்தொட்டில்
மிளிரும் நவரத் தினமாலை
விதியின் முறையே யலங்கரித்து
சூதம் கதலி கரும்பிளநீர்
சுவையவல் நைவேத் தியம்படைத்து
தொழுகந் தருவர் கிம்புருடர்
சுந்தர வீணை யரம்பையர்கள்
பாதம் பரவும் திருத்தொண்டர்
பண்ணேழ் இசையால் புகழ்பாடப்
பாட்டைக் கேட்டு நயக்கின்றாய்
பங்கயக் கண்துயில் கொண்டிலையே
காதற் கண்ணீர் கண்டுவக்கும்
கருணா கரனே தாலேலோ
கவிஞர் நாகேஸ் வரமுறையும்
கண்ணா தாலோ தாலேலோ

இதயத் தினிக்கும் கற்கண்டே
இளமை முதிராப் பசுக்கன்றே
இடையர் குலத்துக் குயர்விளக்கே
இகபர சுகங்கள் தருதருவே
மதியைப் புனைந்து சடை துளக்கி
மழமா விடைமேல் வருநாதன்

மகிழ்ந்து புகழும் மைத்துனனே
மலிந்த உயிர்கள் வினைகணித்து
விதியை வகுக்கும் வேதனெனும்
விறலார் மகனைப் பெற்றவனே
விளக்கிட் டலகிட் டலர்மாலை
விரும்பி யணிந்து பணிதொண்டர்
கதியைப் பெறமுன் நின்றருளும்
கருடா ரூடா தாலேலோ
கடம்பார் நாகேஸ் வரமுறையும்
கண்ணு தாலோ தாலேலோ

எண்ணும் எழுத்தும் எழுத்தொலியும்
இசைந்த இருமூன் றுகாரம்
எட்டிப் பிடிக்கும் குண்டலியும்
எழுந்து குவிந்த முச்சந்தி
நண்ணும் மதியும் மதிபூத்த
நளின சகஸ்ரா ரச்சுடரும்
நாடிய சுடர்சூழ் நடுவீடும்
நமக்கு நயந்து தரும் வேணுப்
பண்ணின் மழையைப் பொழிகின்ற
பாலகு மாரா ரகுவரனே
பாலா ழிக்குங் கிடப்பவனே
பக்தரின் பாலை விரும்புவதேன்
கண்ணுங் கருத்தும் அகலாத
கற்பக மலையே தாலேலோ
கலைதரு நாகேஸ் வரமுறையும்
கண்ணு தாலோ தாலேலோ

உள்ளக் கோயி லிருந்தவன்பர்
ஓதும் வேதத் தொனிக்கினிதே
உறங்கும் கோலங் கொண்டாலும்
உறங்கா தவனாய்த் தொண்டறிந்து
வள்ளற் காத்தால் வரமுதவி
மறலிக் கயிற்றில் சுழலாமல்
வளர்நாற் பாத மணைகாட்டி
வானோர் முனிவோர் வணங்குமெழில்
வெள்ளைக் கோலம் தந்தருளும்
விஷ்ணு தேவா கரிதுயரம்
விலக்கிய ஆதி மூதற்பொருளே
விண்ணவர் முறைமுறை வண்ணமலர்
அள்ளிச் சொரிந்து பூசிக்கும்
அரியவை குந்தா தாலேலோ
அளவை நாகேஸ் வரமுறையும்
அழகா தாலோ தாலேலோ

முந்தை வினையி னிலையறியோம்
மூண்ட பிறவித் துயராழி
மூழ்கிக் களைத்துத் தடுமாறி
மூடச் செயலுற் றலைகின்றோம்
தந்தை யென்றுன் தாள்நம்பிச்
சக்கரம் சங்கு தமைத்துதித்து
சந்தத முன்னைத் தொழுதேத்தும்
சால்பும் சால்பில் வருசுகமும்
தந்தெம் குறைதீர்த் திடுகவெனத்
தளர்ந்து வேண்டித் தவமிருந்தோம்
தளரா வீமன் புரிவிரதம்
தகுதியென் றேற்ற தயாபரனே
அந்திப் பிறையோற் கொருகூறாய்

அமைந்த பகவா தாலேலோ
அளவை நாகேஸ் வரமுறையும்
அழகா தாலோ தாலேலோ

நீரிற் பள்ளி புரிபவனே
நிலத்தை யீரடி யாலளந்த
நெடுமா லேதா ணிடைவந்து
நின்ற பாலன் தனக்காக
வீரச் சிங்க மானவனே
மீனய் ஆமை வராகமுமாய்
மிதிலைச் சீதையி னயகனய்
விறலார் பஞ்சவர் தூதனென
தேரைச் செலுத்திப் போராற்றி
தெய்வ நீதியை நிலைநிறுத்தும்
தீரா, பகலை இரவாக்கும்
செயலாற் றியஅப் பொருளுணர
ஆருக் குத்தான் அறிவுண்டோ
அன்புக் களிறே தாலேலோ
அளவை நாகேஸ் வரமுறையும்
அழகா தாலோ தாலேலோ

நின்றன் தொண்டர் துயர்கண்டால்
நிறச்சிறைக் கருடனில் உடன்வருவாய்
நினைந்து நெகிழ்ந்து நித்தியமும்
நெஞ்சு கலங்கி உணவின்றி
துன்று மொருசாண் துணியின்றி
துயிலும் நிம்மதி மனையின்றி
சுற்றம் கலைந்து தெருத்தெருவாய்த்
தொடர்ந்து நடந்து நாமலைந்து
கன்றிக் கண்ணீர் விடும்காட்சி

கருத்திற் கொண்டோ துயிலின்றிக்
கண்ணுறங் காமற் கிடக்கின்றாய்
கலியுகக் கொடுமை தீர்ப்பவனே
அன்றைப் பாரதம் போலெமக்கிங்
காறுத லருள்வாய் தாலேலோ
அளவை நாகேஸ் வரமுறையும்
அப்பா தாலோ தாலேலோ

இன்ப மலையே இனிதாண்டான்
இணங்கித் துதித்துத் தான்சூடி
இட்ட மாலை விழைந்தேற்கும்
எம்பெரு மானே சோதரியின்
துன்பம் துடைக்கப் பலகோடி
துகிலைச் சுரந்த துழாய்மார்பா
தொடரும் கொடுமழை தடுப்பதற்குச்
சோதிக் கிரியாம் குடைபிடித்த
மின்பொன் னிழைப்பீ தாம்பரனே
வீழி மிழலையிற் சகஸ்ரமலர்
விடையோற் கணிந்து பூசித்த
அன்புக் கண்ணு தவமில்லார்
அறியா மலையே தாலேலோ
அளவை நாகேஸ் வரமுறையும்
அப்பா தாலோ தாலேலோ

நித்தம் அடியார் மனைசென்று
நினைத்த வாறே படியளந்து
நீண்ட கரங்கள் சிவப்பானாய்
நெருங்கி நரம்பு களைப்படைந்து
சித்த முருகு மவர்க்கிரங்கி
தேம்பி யழுத முகங்கண்டு

சிறந்த கண்ணால் அருள் புரிந்து
சிவந்த கண்ண னுய்த்திகழ்வாய்
பத்த ரழைக்க வழிநடந்து
பாத மிரண்டும் சிவந்தனையே
பரிந்த முனிவர்க் கறமுரைத்துப்
பால்வாய் பவளச் சிவப்படைந்தாய்
அத்தத் திருமகள் உறைந்தழுத்தி
அகலம் சிவந்தாய் தாலேலோ
அளவை நாகேஸ் வரமுறையும்
அரசே தாலோ தாலேலோ

இப்பா ரெல்லாம் நிறைந்திருக்கும்
எம்பெரு மானே தாலேலோ
இலக்குமி பார்மகள் வலமிடமாய்
இணைந்த கணவா தாலேலோ
எப்போ தெங்கே நினைத்தாலும்
எம் முன் வருவாய் தாலேலோ
ஏழ்பரிச் சூரிய சக்கரத்தை
இயக்கும் தலைவா தாலேலோ
துப்பார் மேனிச் சிவனயனுய்த்
துலங்கும் பொருளே தாலேலோ
சொல்லும் கிரகம் ஒன்பதையும்
சுழலச் செய்வாய் தாலேலோ
அப்பா அடியோம் நினதடிக்கே
அடைக்கலம் கண்டாய் தாலேலோ
அளவை நாகேஸ் வரமுறையும்
அரசே தாலோ தாலேலோ

## 4. சப்பாணிப் பருவம்

அண்டருக் கரியனே தொண்டருக் கெளியனே
அருவுருவ மாகியெங்கும்
ஐந்தொழில் நிகழ்வதற் காதார மெனுங்காத்தல்
அரியதொழிற் கதிபனுகி
பண்டுதிகழ் வைகுந்த வாசனுய்ப் பிரபந்தம்
பாடுவார் பெருந்தோழனுய்
பஞ்சபூதங்களின் வண்ணமுடன் பார்எங்கும்
பயில்கின்ற பச்சைவடிவாய்
வண்டுலவு தண்டுளப மார்பனுய் நினையுமவர்
மனத்துங்கினித்த வடிவில்
வருகின்ற மாயனே மறைபேசும் வாயனே
மனக்கமல மூறை தூயனே
சண்டமா ருதவினைச் சஞ்சலம் தீர்ப்பவா
சப்பாணி கொட்டியருளே
தருமமிகு நாகேஸ்வ ரக்கிருஷ்ண மூர்த்தியே
சப்பாணி கொட்டியருளே

அன்றுநர காசுரனை அழித்தஐப் பசித்திங்கள்
அபரசதுர்த் தசியிலேதீ
பாவலிப் புனிதஉடை புனிதஉணவுண்டமரர்
ஆனந்தம் பெறவைத்தவா
ஒன்றிமனங் குவியுமொரு தந்திரம் தெரியாமல்
ஊழ்வினைக் குழியழுந்தி

ஊறோசை சுவைகள் ஒளி நாற்றமெனும் ஐந்தின்
 உணராமல் அல்லற்பட்டு (வகை
நன்றென்று தீதையும் தீதென்று நன்றையும்
 நாடிப் பிடித்தலுத்த
நாயேனுக் கிசைந்ததாய் தந்தையாய் வந்து நீ
 நன்னெறி யுரைக்கொ ணாதோ
தன்னையறிந் தின்பமுறும் கதியருளு மையனே
 சப்பாணி கொட்டியருளே
தருமமிகு நாகேஸ்வ ரக்கிருஷ்ண மூர்த்தியே
 சப்பாணி கொட்டியருளே

காடுநீ போவென்ற கைகேயி கட்டளையைக்
 கருணையோ டேற்றுவந்து
கலங்காத சீதையொடும் தம்பிஇலக் குமணனொ
 கங்கைநதி கடந்து சென்று (டும்
வேடுவக் குகனுதவும் மிகுந்தஉப சரிப்பேற்று
 விரவுமுனி வரர்களேத்த
விண்ணுயர் மலைகாடு முட்புதர் நதிகடல்
 வேதனையிலாது வைகி
கூடுமாரீசனின் சதியினால் மனையாளைக்
 குறிப்பிட்ட பறிகொடுத்து
குணங்கெட்ட இராவணன் தலைபத்தரிந்து ஜெயம்
 கொண்ட ராமச்சந்திரா
தாடலை நிலைப்பட்ட தத்துவ மூணர்ந்திடச்
 சப்பாணி கொட்டியருளே
தருமமிகு நாகேஸ்வ ரக்கிருஷ்ண மூர்த்தியே
 சப்பாணி கொட்டியருளே

மாதா யசோதைதன் மடிமீ திருத்தியை
வண்ணப்பொற் கிண்ணத்திலே
மலிந்தபால் முப்பழம் பாகுதேன் சேர்ந்தமுது
வளைக்கரத் தெடுத்தெடுத்து
நாதாஉண் ணென்றுவாய் வைத்தூட்டப் பல்லெ
நகைத்திறுக் கிப்பிடித்து (லாம்
நாவினால் வெளிதள்ளி உண்ணமாட் டேனென்று
நடிக்கின்ற கோபாலனே
ஆதார மனத்தன்பர் அழைக்கின்ற இடமெலாம்
ஆவலுடன் ஓடி ஓடி
அவர்தரும் பால்தயிர்நெய் அள்ளியள் ளிப்புசிக்
அருட்செயற் காரணத்தைத் (கும்
தாதார மார்பனே எமக்குரை நிகழ்த்திடச்
சப்பாணி கொட்டியருளே
தருமமிகு நாகேஸ்வ ரக்கிருஷ்ண மூர்த்தியே
சப்பாணி கொட்டியருளே

வந்தமுனி விசுவாமித் திரன்யாகம் காத்திடும்
வல்லவா, மாவிருஷிகள்
மாசிலா யாகங்கள் யாவையு மழித்திடும்
வஞ்சனை பாதகத்தி
முந்துதிரி சூலத்தன் முகடுபடு சிகரங்கள்
மோதிப்பூ தூளியாக்கும்
மூரியுடை யாள்கால்கள் மூட்டிவரு நிலமெலாம்
முழங்குநீர்க் குளங்களாகும்
குந்தக சழக்கிவெகு கொலைகாரி தாடகைக்
கூறுபேருடை யரக்கி
கொடுமார்பு தன்னிலே ஒருவாளி விட்டமரர்
குளிர்மாலை பூண்டதோளா

சந்தமுயர் தாளங்கள் எழுசிலம்பி னெடுதவழ்ந்து
சப்பாணி கொட்டியருளே
தருமமிகு நாகேஸ்வ ரக்கிருஷ்ண மூர்த்தியே
சப்பாணி கொட்டியருளே

முக்கணன் நுதலிலெழு மாறுசுட ராய்த் தோன்றி
முன்னின்ற பஞ்சபூதர்
முயங்கிக் களைப்பெய்த மூதியசர வணப்பொய்
முருகனாய் அவதரித்தோன் (கை
மிக்கமகிழ் வெய்திஎன் னம்மானம் மானென்னும்
விஷ்ணுவே, கன்னியிருவர்
விழிநின்று வெளிவரப் பெற்றெடுத் தொருமகள்
வேடுவரின் வள்ளிஎனவும்
தொக்கவா னவர்க்கரசன் சொற்படிஐ ராவதம்
தூக்கிவளர்த் தெடுத்த வல்லி
துதிதெய்வ யானையென வரவும்திரு வருள்செய்து
சுடர்வேலன் சத்திகளென
தக்கதுணை இக்கலி யுகத்துதவ வைத்தவா
சப்பாணி கொட்டியருளே
தருமமிகு நாகேஸ்வ ரக்கிருஷ்ண மூர்த்தியே
சப்பாணி கொட்டியருளே

அஞ்சனு தேவிதரு திருமைந்தன் அனுமனுடன்
அணுகுவா னரகுழுக்கள்
அணிதரவும், இலங்கையின் அரசுபுரி இராவணன்
ஆயுதமி லாதுநிற்க
அஞ்சிடாய் இன்றுபோய் நாளைவா என்றுபுகல்
ஆதிப்பெருந் தகைநாயகர்
அன்புமல ரிடுபவர்க் கருளென்ற கனிகொடுத்
தமரபதம் உதவுமிறைவா

வஞ்சனைக் கூனிக்கும் மடிகூன் நிமிர்ந்திட
மணியெறிந் திடுமிராமா
வாடிக்கலங்கியழும் பரதனிடம் பாதுகையை
வழங்கிய அயோத்தி மன்னு
தஞ்சமென்னுன்னடிகள் நம்பிநின்றேம் காணச்
சப்பாணி கொட்டியருளே
தருமமிகு நாகேஸ்வ ரக்கிருஷ்ண மூர்த்தியே
சப்பாணி கொட்டியருளே

எங்கணு முறைந்திடும் கணபதி விநாயகன்
ஏரம்பன் விக்னேஸ் வரன்
இமையோரிற் பெரியனெனும் ஏற்றத்தை எவ்வுல
எண்ணிமுதலிற் றுதிக்க (கும்
சங்கரி பராசக்தி சாம்பவி மனோன்மணி
தற்பரை உமா பவானி
தமையனெனப் பாராது தந்தசா பங்கொண்டு
தனிக்குருட்டு நாகமாகி
ஐங்கரன் வருசமையம் ஆதிவடி வுற்றலகி
லாடல்கள் புரிந்த சீலா
அளவற்ற சமயங்க ளாதரிக்கும் தெய்வம்
அனைத்துநீ யாகக் கண்டோம்
சங்கீசை விரும்பிடும் சல்லாப னேசெல்வச்
சப்பாணி கொட்டியருளே
தருமமிகு நாகேஸ்வ ரக்கிருஷ்ண மூர்த்தியே
சப்பாணி கொட்டியருளே

ஆதியே ஆதியாம் சோதியே சோதிக்குள்
அணுவாகி நின்ற சுடரே
அறுபத்து நான்குகலை மகிபனே அறிவிலார்
அறியாத ஞானமலையே

வேதனே வேதத்தி னுச்சியே ஆகமம்
　　விளக்கிடும் குருநாதனே
விரும்பியுணு மடியவர் விழுங்குமது ரச்சுவை
　　மேவுதே வாமிர்தமே
நீதியே நீதியை நிலைநாட்டும் வேந்தனே
　　நித்தியா னந்தசுகமே
நெக்குநெக் குருகுவார் பக்கநின் றருள் செயும்
　　நிருமலா நேமிநாதா
சாதிமத பேதகுண மற்றவர் சகாயனே
　　சப்பாணி கொட்டியருளே
தருமமிகு நாகேஸ்வ ரக்கிருஷ்ண மூர்த்தியே
　　சப்பாணி கொட்டியருளே

காளிங்க னைத்திசை நதிக்கரைக் கடம்பேறிக்
　　கால்பாய்ந் தடக்கியாடி
கன்றுன அசுரனை விளவுக் கெறிந்துபெரு
　　கருநாரை யான பகனை
நீளுமெரி வாய்பிளந் தரவினுரு வந்தாங்கும்
　　நிலைஅகா சுரனைமாய்த்து
நெறிதவறிக் கழுதையாய் வருதேனு காசுரனை
　　நின்றபனை தன்னில் மோதி
நாளும்வந் துடையின்றி யமுனையில் நீராடும்
　　நங்கையரின் ஆடையெல்லாம்
நாடிக்கள வாடிநிர் வாணமாய் நீராடல்
　　நதிப்பழிப் பென்றறிவுரைத்து
தாளஞ் சதங்கைசொலப் பாடும்சங்கீதனே
　　சப்பாணி கொட்டியருளே
தருமமிகு நாகேஸ்வ ரக்கிருஷ்ண மூர்த்தியே
　　சப்பாணி கொட்டியருளே

## 5. முத்தப் பருவம்

பாரார் காட்சிப் பொருளெல்லாம்
பயனென் றிலவுக் கிளிபோலப்
பகலோ டிரவு தடுமாறிப்
பஞ்சப் புலனின் பாதையிலே
தீராப் பிறவிக் கடல்தாண்டத்
தெரியா தாசைப் புயலிடையே
சிக்கிக் கலங்கிச் சிதறிமனம்
திக்கற் றவராய் அலமந்தோம்
தாரார் துளசித் திருமார்பா
தாயாய் வந்த பேய்முலையைத்
தாவிப் பாலோ டுயிர்குடித்துத்
தவப்பசு மேய்க்கும் கோபாலா
சீரார் அறத்தின் நெறிகாட்டும்
தேவா முத்தந் தந்தருளே
செழித்த நாகேஸ் வரமமர்ந்த
செல்வா முத்தந் தந்தருளே

ஆடும் புயங்கம் அணிபரமன்
ஆண்டி வடிவில் மனைதோறும்
ஐய மேற்ற முனிமனையார்
அறியாக் கர்ப்ப நிலைதாங்கி
கூடும் நால்பன் னிராயிரமாம்
குலவும் முனிவர்கள் உதித்திடவும்

குளிர்மோ கினியாய் உலைக்கண்டு
குணங்கெட் டிருடிகள் மயங்கிடவும்
நாடும் நீவிர் ஒன்ருகி
நவிலு மரிகர மகன்வரவும்
நமச்சி வாய நாரணனுய்
நாடக மாடிய பெருமானே
தேடிடு பன்றியி னுருவாய
சிறுவா முத்தந் தந்தருளே
செழித்த நாகேஸ் வரமமர்ந்த
செல்வா முத்தந் தந்தருளே

கசியும் மனமாம் பழனத்தில்
கலந்த அறிவின் மேழியினல்
கற்ற கலையாம் எருவிட்டு
காலங் கருதிப் பணிபுரிந்து
வசியம் பூத்த தெய்வீகம்
மலிந்த பக்தி நீர்பாய்ச்சி
வாய்த்த வரமா விதையிட்டு
வளர்த்த அருளாய் முதிர்கதிரால்
பசியைத் துடைக்க நாள்பார்த்துப்
பாது காக்கும் தொண்டர்உளப்
பான்மை காணத் தருமத்தின்
பாலன் வடிவாய் நீகாக்கும்
பசுவை மேய்த்துப் பலனெடுக்கும்
பரமா முத்தந் தந்தருளே
பைம்பொழில் நாகேஸ் வரமமர்ந்த
பகவா முத்தந் தந்தருளே

முந்திப் படித்த ஒருசாலை
மூதுமா ணவனும் நின் நண்பன்
முனிவன் சுதாமா எனும் பெயரோன்
மொழியும் மூவொன் பான்மக்கள்
விந்தைப் படவே பெற்றெடுத்தும்
விலகாக் கொடிய வறுமையினும்
வேண்டி நின்பாற் கொணர்ந்தளித்த
விலைபுல் லவலொரு பிடியுண்டு
இந்தப் புவியிற் பெருசுகமும்
இமையோ ரறியாப் பதசுகமும்
இன்னே பெறுதி எனச்சொல்லா
தினிதே கொடுத்த பெருமானே
சிந்தைத் திரையில் சிவங்காட்டும்
தேவா முத்தந் தந்தருளே
தேரூர் நாகேஸ் வரமமர்ந்த
திருமால் முத்தந் தந்தருளே.

ஆயர் குலத்துக் கோபியர்கள்
அணியணி யாகப் புனிதமுடன்
ஆய்ந்த கனியும் பசுப்பாலும்
அன்பு கலந்து பரிந்தூட்ட
மாயக் கண்ணே எல்லோரும்
வழங்கு முணவெல் லாமருந்தி
வயிற்றுப் பசியோ மாறவில்லை
வாரித் தருக எனக்கூறி
வாயிற் புசித்த உணவெல்லாம்
மன்னுயிர் அனைத்தும் பெறுமாறு
வரும்படி யளக்கும் மாதவனே
வசுதே வன்மகிழ் மணிமருந்தே

தூய தொண்டர் தமைவிலகாத்
துணைவா முத்தந் தந்தருளே
சோதி நாகேஸ் வரமமர்ந்த
சுடரே முத்தந் தந்தருளே.

பாரின் பாரம் தீர்ப்பதற்கும்
பரிந்து பூமா தலையெறியும்
பாற்கடல் நண்ணி நீ கிடந்த
பாம்பின் சயனத் துயிலெழுப்பி
சேரும் துயரம் தீரென்னத்
தேவர்கள் யாதவ ராய்வரவும்
திரண்டிடும் தேவ மாதரெலாம்
சிறந்த கோபிய ராய்வரவும்
சீருய ராதி சேடன்தன்
சிரேஷ்ட பலராம னாய்வரவும்
தேவகி வயிற்றில் தேவருக்கு
ஜெயந்தரு கண்ணன் எனவருவேன்
தாரணி காப்பேன் எனவுரைத்த
தலைவா முத்தந் தந்தருளே
தமிழ்வளர் நாகேஸ் வரமமர்ந்த
தயாளா முத்தந் தந்தருளே.

மாதவம் புரிந்த மாவலிபால்
மாணிக் குறள்வடி வாய்த்தோன்றி
மண்ணில் மூன்றடி மாத்திரமே
வழங்கெனக் கெனவே விடைகேட்டு
பாதம் இரண்டில் உலகெல்லாம்
பற்றிய மூலப ராபரனே
பஞ்சவர் பாங்குத் தூதுவனாய்ப்
பயின்று மாமிக் கிரகசியம்

ஓதிக் கன்னன் பிறப்புரிமை
உரைத்து வரமும் ஒண்காதில்
ஒளிரும் கவச குண்டலமும்
உவந்து வாங்கிப் பாரதத்தை
நீதி நிலைக்க நிகழ்த்தியவா
நின்று முத்தந் தந்தருளே
நிழல்மிகு நாகேஸ் வரமமர்ந்த
நிருபா முத்தந் தந்தருளே.

மருவு மடியார் மனங்குளிர்ந்து
வந்து படைக்கும் திருவமுதில்
வாய்க்குச் சுவையாம் உப்பின்றி
வரவேற் றருளும் பெருமானுய்
திருவிண் ணகராம் கோயிலிலே
திகழும் ஒப்பிலி அப்பனென
செகமகள் வணங்கும் கல்யாணத்
திருக்கோ லத்தில் வீற்றிருந்து
திருவேங் கடம்போக் கியலாதார்
சேவித் திடுமப் பதிப்பலனைச்
செய்து நினைந்த பேறருளும்
தினகரர் கோடிப் பிரகாசா
குருவா யினித்த கீதைசொலும்
கோவே முத்தந் தந்தருளே
குரவார் நாகேஸ் வரமமர்ந்த
குழந்தாய் முத்தந் தந்தருளே.

நிலமகள் ஸ்ரீமகள் ஸாரமகள்
நீலாம் பிகைமகா லட்சுமியாம்
நிலவீடு பஞ்ச சக்தியுடன்
நின்றருள் சார நாதனென

தலமிசை யூழிக் காலத்தில்
சதுர்மறை கடத்திட் டழியாமல்
தழுவிக் காத்த பதியென்னும்
நன்திருச் சேறையி லுறைபவனே
வலிவுறு மட்சர மனைத்தினிலும்
வடிவுடை சௌரி ராஜனென
வல்வீ கடாட்சன் தனையழித்து
வதிதிருக் கண்ண புரத்தானே
மலவான் செயற்படு நெறிபுகலும்
வரதா முத்தந் தந்தருளே
காணுயர் நாகேஸ் வரமமர்ந்த
வண்ணா முத்தந் தந்தருளே

நந்தி சாபம் தீர்ப்பதற்கு
நாடித் துதித்து பெயர்த்தலமாம்
ஞானி சிபிச்சக் காவர்த்தி
நலிந்த புறாவின் எடைக்காகச்
சொந்தத் தசையை வெட்டிவெட்டி
துலைக்கோ லிட்டும் காணாமல்
துணிந்து தட்டினில் தானமர்ந்து
தோன்றும் எடையைச் சமன்செய்த
அந்தக் காட்சியைக் காண்பதற்காய்
அருணன் திசையில் இருந்தபடி
அசைந்து மேற்கு முகமாக
அணிநந் திபுர விண்ணாம்
முந்திப் பயின்ற வேதசிர
முதல்வா முத்தந் தந்தருளே
முகில்தவழ் நாகேஸ் வரமுறையும்
முனிவா முத்தந் தந்தருளே.

## 6. வருகைப் பருவம்

ஐயா வருக ஆன்மாவுக்
கதிபா வருக அரியமறை
அதிபா வருக அடியவரின்
அகமும் புறமும் நிறைந்திருக்கும்
மையார் மேனி மாயவனே
வானத் தேங்காய் வருக்கையிலே
வருடி மாவின் கனிஉதிர்த்து
வாழைப் பழத்தைச் சேருக்கிக்
கையாற் பிசையாப் பஞ்சமிர்தம்
கருப்பஞ் சாற்ரோ டோடிவரும்
கங்கை கடம்பின் தேன்சேரக்
களிவண் டுண்டு கவிபாடும்
பையார் நாகேஸ் வரக்கிருஷ்ண
பகவான் வருக வருகவே
பக்திப் பொழிலில் முதிர்ந்தினிக்கும்
பழமே வருக வருகவே.

அவலும் பாலும் பழந்தயிரும்
அடைதயிர் வெண்ணெயு முனக்காக
ஆய்ந்து கொணர்ந்து நிற்கின்ரும்
அடியார் கவலைகள் தீர்ப்பவனே
சிவனுய் உமையாய்ப் பங்கயனுய்
தேவரும் முனிவரும் யாவருமாய்

செங்கதி ரோன்மூதற் கோன் நாளாய்
சென்றும் நின்றும் வாழ்வனவாய்
எவரா லுமுணர்ந் தறிவரிய
எந்தாய் எங்கள் குறைசொல்லி
இதயம் அமைதி பெறுதற்காய்
இமைகொட்டாமல் இருக்கின்றோம்
கவியார் நாகேஸ் வரக்கிருஷ்ண
கண்ணு வருக வருகவே
கருவாய் உலகின் முன்னின்ற
கரும்பே வருக வருகவே.

அன்பு மலரால் அர்ச்சித்தோம்
அருளாங் கனியைத் தருவாயோ
அரங்கா குரங்கு வடிவத்தின்
ஆஞ்ச நேயரின் அகத்தரங்கில்
மின்பொற் பாதச் சிலம்பரற்ற
மிதிலைச் சீதா லட்சுமியும்
வீரத் தம்பி இலக்குவனும்
விளங்கு நின்பணி கொண்டேத்த
என்புற் றுருகு மடித்தொண்டர்
இணைத்து நட்ட சித்திரம்போல்
இமையா நாட்டத் துடனிற்க
இனிது நடிக்கும் இராமையா
இன்ப நாகேஸ் வரக்கிருஷ்ணு
எம்முன் வருக வருகவே
எழிலார் கருடன் மிசையேறும்
இறைவா வருக வருகவே.

தேசமா நின்னாகத் தலம்பற்றி
செவ்வாய் ஊறும் குழலமுதை
தேங்கு பதினுன் குலகினிலும்
செப்பரு மண்ட மனைத்தினிலும்
ஓவா ஓங்க ாரத்தொனியாய்
உயிர்கள் அறியா உட்டொனியாய்
உரைக்கும் ஏழ்வகைப் பிறப்பினங்கள்
ஒருமித் தெழுப்பும் ஒலிபலவாய்
பாவார் இராகம் தாளமெனும்
பண்ணும் திறனும் அவைசிறக்கப்
பரப்பும் கருவிப் பல்லியமாய்
பரிமள நாதப் பிரம்மமுமாய்
நாவா யூறி நாம்சுவைக்க
நயந்தாய் வருக வருகவே
நர்த்தன நாகேஸ் வரக்கிருஷ்ண
நாதா வருக வருகவே.

அறத்தை மறுத்த சுயோதனனும்
அவனே டுதித்த கொடியவரும்
அழியும் வண்ணம் வந்துதித்த
ஆழிக் கரனே வருக, அருட்
டிறத்தைத் தெளிந்து மனுநீதிச்
செங்கோல் பிடித்த பாண்டவரும்
திரௌபதித் தங்கை முதலோரும்
தெரியா வனவா சம்புரிந்து
புறத்தே நின்று பணிந்திறைஞ்சிப்
போய்வா தூதென் றிரந்தாற்ற
பொல்லா னிடத்தே புகுந்துபெரும்
பொறியிற் சிக்கிப் புகழ்படைத்த

பிறப்பிறப் பில்லா மனுநீதப்
பெருமாள் வருக வருகவே.
பேரார் நாகேஸ் வரமமர்மாப்
பிள்ளை வருக வருகவே

அறிவுக் கண்ணென் றில்லாதார்
அறியாச் சோதி நெடுமலையே
அறிவா லறிவார் அகமலரில்
அமுதம் பெருகும் அருட்கடலே
துறவுப் புனிதர் நிரந்தரமாய்ச்
சுவைத்து மகிழும் நிறைகனியே
துவார காபுரி வந்தமர்ந்த
துவாத சாந்தச் சுடர்விளக்கே
மறலிக் கணக்கை யழித்தெழுதி
மரண மில்லா வாழ்வுநலம்
வழுவா வடியார்க் கருள்புரியும்
வரத ராஜ வைகுந்தா
குறியைக் குறியாக் குறிப்புணர்த்தும்
கோமான் வருக வருகவே
கொடையார் நாகேஸ் வரக்கிருஷ்ண
குமரா வருக வருகவே.

ஆற்றிற் புளியைக் கரைத்ததுபோல்
அமைந்த மனிதப் பிறப்பருமை
அறியேன் சழக்குற் றுருதுகலை
அனைத்தும் மாயா பாசமெனும்
சேற்றிற் செலுத்திச் சிதருமல்
தெளிந்த ஞானத் தேன்சொரிந்து
சித்து சத்தா னந்தமெனும்
திறங்கண் டினிதுசும் மாவிருக்கும்

பேற்றை யுதவும் நெடுமாலே
பிள்ளைக் கலியைத் தீர்த்திட நீ
பேணும் சுவர்ண குப்தரின்பால்
பேசும் சங்கை விடுத்தழைக்க
தோற்றப் பலனைச் சொலும்பழனிச்
சுகந்தன் மாம னேவருக
சுகநிறை நாகேஸ் வரத்தெங்கள்
துணைவா வருக வருகவே.

ஆத்தாள் அம்பிகை மலைநீலி
ஐந்தொழி லாற்றும் திரிசூலி
ஆதிக் கம்பா நதிக்கரையில்
அரிய தவங்கள் புரிந்திலிங்கம்
காத்தாள் கட்டித் தழுவியொளிர்
கைவளை கனமுலைத் தழும்பேற்றிக்
கருது முயிர்கள் பசிதீரக்
கணித்திடு மிருபடி நெல்வாங்கிப்
பூத்தாள் அறங்கள் பொலிகாஞ்சி
பொலிவாள் மகிடா சுரன்தலையைப்
பொறிவா ளாலே வீழ்த்தியவள்
பொருந்தும் சொர்ண மனோன்மணிக்கு
மூத்தோன் வருக பிரபஞ்ச
மூர்த்தி வருக மணியோசை
முழங்கும் நாகேஸ் வரச்செல்வ
முகுந்தா வருக வருகவே.

நால்வகை முத்திக் கொருவித்தே
நாதமும் விந்தும் கலையுமெனும்
ஞான பானுவே நல்லோரின்
நாவில் மனத்தில் விலகாத

மால்வரை யேசெங் கமலத்தில்
வதியும் அஷ்ட லட்சுமியாம்
மாணுயர் சக்தி வளம்பெருக்க
மக்கள் வேண்டும் வரமெல்லாம்
ஆல்விருட் சம்போல் நனியுதவி
ஆணவ வேகம் அடங்கிவரும்
அடியார் தொண்டை அளந்துதிரு
வடியைச் சுமக்கத் தருபவனே
பால்வழி வாயா வருகசுகம்
பாலிப் பவனே வருகதமிழ்
பயிலும் நாகேஸ் வரவிஷ்ணு
பகவான் வருக வருகவே.

நாரா யணாய நமஎன்று
நாளும் நாரத மாமுனிவன்
நாவிற் சுமக்கும் நாயகனே
நந்திக் கருடன் மீதமர்ந்து
பேரார் அண்டங் கடந்தசுடர்ப்
பிழம்பாய் விளங்கும் பரம்பொருளே
பிரியாப் பூசனை புரிவாரைப்
பிரியாச் செல்வக் கற்பகமே
தாரார் துளசீ தரவருக
சரசகோ விந்தா வருகபவச்
சட்டை கிழித்து நிட்டைஎனும்
சாந்தம் தருவாய் வருகமுனை
ஏரா யுதற்கினை யோய்வருக
இடைக்குல மணியே வருகஅருள்
இனித்த நாகேஸ் வரப்பக்த
இரட்சக வருக வருகவே.

## 7. அம்புலிப் பருவம்

பித்தனின் சென்னியில் ஒருகலையாய்
பிரகா சிக்கும் பிறைமகனே
உத்தமி தேவகி தருபுதல்வன்
உன்னை விரும்பி யழைக்கின்றான்
இத்தலங் காக்கும் புண்ணியனை
இடையன் சிறுவனென் றெண்ணாதே
வித்தக நாகேஸ் வரனுடனே
விளையா டிடவா அம்புலியே

பொருந்திய நீயொரு முறைதேய்வாய்
பொலிந்திடு முழுமதி யாய்வருவாய்
அருந்தவர் அமரர்கள் அனைவோரும்
அறிகுவர் இளமையும் முதிர்வுமெலாம்
வருந்தன தடியவர் வசப்பட்டு
மருந்தெனும் வடிவுகள் பலவெடுப்பான்
விருந்திடும் நாகேஸ் வரனுடனே
விளையா டிடவா அம்புலியே

தண்கட லுன்றாற் பெருகுமெனும்
தற்செருக் குடன்நீ தடுமாறிப்
பண்கடல் எங்கள் பகவானைப்
பாரா முகமாய் இருக்கின்றாய்

திண்கடல் புவிகளும் நவகோளும்
தேவரும் பூதமும் அவனவவேர்
விண்குளிர் நாகேஸ் வரனுடனே
விளையா டிடவா அம்புலியே

ஞாலமும் வானமும் போற்றிசெய
நன்னிழல் வாகை விளாவருகே
சீலமி குந்திடு மிருபாம்பாய்த்
தெரிசனம் காட்டிய சிறுகுழந்தை
கோலம ஞேன்மணி மகிழ்தனமையன்
கொடுக்கவும் தடுக்கவும் தகைமையுளான்
வேலுயர் நாகேஸ் வரனுடனே
விளையா டிடவா அம்புலியே

உன்னிறம் பொன்மய மாயிடினும்
உடலில் மாருக் கறையுடையாய்
தன்னிறம் நீலமும் வாய்கண்கை
தாள்களும் சிவப்பாய் உடையனவன்
துன்னிய செந்நிற அம்சத்தால்
தொண்டரின் துயர்களை வான் அறிவாய்
மின்னெழில் நாகேஸ் வரனுடனே
விளையா டிடவா அம்புலியே

நாடிய தக்கனின் சாபத்தால்
நலிவுற் றலைந்ததை உணராயோ
கூடிய ஒன்ருய்ப் பலவாகிக்
கோடிபல் லாயிர வடிவினிலே
நாடக மாடிடும் நாரணனுர்
நன்னெறி காட்டி யணைத்திடுவான்
வீடருள் நாகேஸ் வரனுடனே
விளையா டிடவா அம்புலியே

தேசஞ் செழிக்க வளந்தருவாய்
சிறந்த வாழ்வுச் சுகந்தருவாய்
பாசந் தீர்க்கும் பாதையினைப்
பரிவாய்ப் பகர்ந்திட வல்லாயோ
நேசம் குலையா நிறைவீடு
நிரந்தரம் தருவான் நெடுமாயன்
வீசலர் நாகேஸ் வரனுடனே
விளையா டிடவா அம்புலியே.

வரையார் சிவனாய்ச் சத்தியுமாய்
சுழங்கு பற்பல தேவர்களாய்
உரையார் வேதத் தூச்சியுமாய்
ஓங்கா ரத்தின் உட்பொருளாய்
நிரையாய் ஐந்தொழில் நெறிப்படுத்தும்
நெடுங்கணக் குணர்த்தும் காவலன்காண்
விரையார் நாகேஸ் வரனுடனே
விளையா டிடவா அம்புலியே.

துளங்கு சங்கும் சக்கரமும்
சுருதிக் குழலும் இசைபொழிய
இளங்கற் றுவின் நிரைமேய்க்கும்
எம்மான் எவ்வுயி ரையுங்காக்க
உளங்குளிர் மலர்மிசை உறைகின்றான்
ஓதி யுணர்ந்திடற் கரியவன்காண்
விளங்கிடும் நாகேஸ் வரனுடனே
விளையா டிடவா அம்புலியே.

வரிசையின் முல்லைப் பல்லழகும்
மலர்ந்த தாமரை வாயழகும்
கரமல ரழகும் கண்ணழகும்
கட்டிய செஞ்சடை முடியழகும்
தருமணிப் பீதாம் பரத்தழகும்
தளர்நடை யழகும் கண்டிடலாம்
விரிபொழில் நாகேஸ் வரனுடனே
விளையா டிடவா அம்புலியே.

## 8. உறியிருடு பருவம்

திருமகள் உலகம் தருமாது
சேரும் நீலா வதிமாது
பெருநிதி முதலன தரும்போது
பெருமாள் நினக்குக் குறையேது
வருபசு நிரையினம் வளர்த்தெடுத்து
வரன்முறை கடைந்த வெண்ணெயிது
கருணையின் நாகேஸ் வரம்பொலியும்
கண்ணா தயிருறி திருடேலே.

பிரமன் தந்த கலசத்தில்
பிறந்திடு மன்புப் பால்காய்ச்சி
மருவிய தவமெனும் பிரையிட்டு
மனமுயர் அறிவெனும் மத்தாலே
உருகிநின் றுருகா தெடுத்தில்லத்
துயரத் தூக்கிய புதுவெண்ணெய்
கருதும் நாகேஸ் வரம்பொலியும்
கண்ணா தயிருறி திருடேலே.

கன்னன் புரிந்த தருமமெலாம்
காட்டுவ துன்கழுந் கதியென்னும்
துன்னும் பொருளைப் புலப்படுத்த
தொடரும் மரணத் தறுவாயில்

முன்னே வந்து முகந்தனை அம்
முறையிங் கெமக்கு முதவுவையோ
கன்னல் நாகேஸ் வரம்பொலியும்
கண்ணு தயிருறி திருடே லே.

சொற்பொரு ளறியாப் படைவீரர்
சுட்டும் வெட்டித் துளையிட்டும்
பிற்புறக் கட்டிட் டிழுத்தடித்தும்
பெருங்குண் டெறிந்து வீடுடைத்தும்
பற்பல கொடுமை யெமக்கிழைக்கப்
பார்த்தும் பாராக் கள்வன் நீ
கற்பக நாகேஸ் வரம்பொலியும்
கண்ணு தயிருறி திருடேலே

அமையுந் தொண்டர் அழைத்திடுமுன்
அவரவர் துயரம் தீர்த்திடுவாய்
தமிழொடு சமயத் திருத்தொண்டு
தலைக்கொண் டார்படு கொலையுண்டார்
சுமைமிகு நாம்செய் தவறெல்லாம்
தொழுதிடு மெமக்குரை செய்யாமுன்
கமழலர் நாகேஸ் வரம்பொலியும்
கண்ணு தயிருறி திருடேலே

நிலையாய் நினைக்கும் நிலையறியோம்
நெகிழும் பரவச நெஞ்சற்றோம்
தலையால் மஞ்சனம் தளிர் மலர்கள்
சந்ததம் சுமக்கும் தவமில்லோம்

அலையார் சுழலிற் றடுமாறும்
அடியோம் நின்தாள் பிடிப்பதன்முன்
கலையார் நாகேஸ் வரம்பொலியும்
கண்ணா தயிருறி திருடேலே.

துதிதரு களவுக் குணச்சுமக்கும்
தோழரின் முதுகினி லேறுதே
பதறிக் கீழே நீவிழுந்தால்
பாதம் வெதும்பிச் சிதறிடுமே
விதிமுத லிமையோர் அடியார்கள்
விழிநீர் பெருகிக் கவலாரோ
கதிதரு நாகேஸ் வரம்பொலியும்
கண்ணா தயிருறி திருடேலே.

அவலமு தனுதினம் தொண்டுடையார்
அணியணி யாகத் தரஉண்பாய்
நவமணிக் கலசப் பால்தேன்நெய்
நயமாய் யசோதைத் தாய்தருவாள்
தவமணிக் கோபியர் மனையெல்லாம்
தனிக்கள வெடுக்கத் தவழுவதேன்
கவினுறு நாகேஸ் வரம்பொலியும்
கண்ணா தயிருறி திருடேலே.

தேவர்கள் தேடிடச் சிறையிடையே
தேவகி வசுதே வனும்தேட
நாவிசை முனிவரர் தேடநினை
நலிந்திடும் கம்சன் தேடவேய்ப்

பாவிசை செய்யும் பாலா நீ
பால்நெய் தேடும் பொருளென்ன
காவுயர் நாகேஸ் வரம்பொலியும்
கண்ணு தயிருறி திருடேலே.

உடம்பெனும் மனையில் உள்ளமெனும்
உயர்தக ளிக்குள் ஒளிவிளக்காய்
இடம்பெறும் எங்களி ராகவனே
எல்லாம் உன்செய லெனஉணர்ந்தோம்
கடந்திடு காலப் பிழைபொறுத்துக்
கதிபெறு முறுதியைத் தருவதன்முன்
கடம்புயர் நாகேஸ் வரம்பொலியும்
கண்ணு தயிருறி திருடேலே.

## 9. சிறுபறைப் பருவம்

தந்தனம் தனம்தனம் தந்தனம் தனம்தனம்
தந்தனம் தனந்தனமெனத்
தண்டையொலித் திடத்தாயின் மடியும்கோ பியர்
தாவித் தாவிக்குதித்து (மடியும்
தந்தபா லுண்டின்னுங் கொண்டுவா பாலென்று
சாலக்கண் மூடியழுது
தவளவாய் விட்டலறித் துள்ளித்திரிந்தங்கு
சார்ந்த சிறு தோழருடனே
முந்திவிளை யாடுவேன் என்றுபுன் முறுவலொடு
முற்றத்தி லாடியாடி
மொழிகின்ற உலகெலாம் விளையாடிக் காத்திடும்
மூர்த்தியே புருஷோத்தமா
செந்தமிழ் சிறந்தருட் கந்தமலி தேன்பொழியச்
சிறுபறை முழக்கியருளே
செல்வநா கேஸ்வரச் சிங்காரக் கண்ணனே
சிறுபறை முழக்கியருளே.

மன்னனும் பல்லவன் தன்முதுமை தீரென்ன
மறுத்திடும் கணிகண்ணனை
வசைசொல்லி நாட்டைவிட் டோடென்ற போதி
மருதேசம் செல்ல அவனின் (லே
பின்னே தொடர்ந்தனை பெயர்த்துத் திரும்பிவர
பிரியாமல் நீயும்வந்தாய்

பேரான காஞ்சியிற் சீராயமர்ந்தவா
பெருகுதமிழ்ப் பாடற்பிரியா
பொன்னோங்கு கோபுரம் மின்னோங்கு முடியிலே
பூவைமயில் கிளிகள் கருடன்
போற்றியிசைத் தாடிடத் தண்கடம் பலர்சிந்திப்
பூதலம் பவளமாக்கும்
தென்னளவை யூரிலே திருக்கோயில் கொண்டவா
சிறுபறை முழக்கியருளே
செல்வநா கேஸ்வரச் சிங்காரக் கண்ணனே
சிறுபறை முழக்கியருளே.

சோமுகன் கடலுக்குள் எறிந்தமறை மீட்டமீன்
சுழல்மத்தைத் தாங்குமாமை
துணிஇரணி யாட்சனல் கடலிலிடு பூமியைத்
தூக்கிவரும் பெரும்வராகம்
நாமுணரும் நாராய ணாயநம எனும்பாலன்
நயந்த நரசிங்கவடிவம்
நாடிமூ வடிமண்ணைக் கேட்டவா மனரூபம்
நவின்றஜம தக்கினிமுனி
ஓமவிதி பிந்தியதற் குன்தாயை வெட்டுகென
உயிர்கொன்ற பரசுராமன்
உத்தம சீதாராமன் உழுமேழிப் பலராமன்
உறிதிருடு கிருஷ்ணராஜன்
சேமமருள்கல்கியென அவதாரம் செய்தவா
சிறுபறை முழக்கியருளே
செல்வநா கேஸ்வரச் சிங்காரக்கண்ணனே
சிறுபறை முழக்கியருளே.

மருவுங் குபேரனின் மக்கள் நளகூபரன்
மணிக்கிரீ வன்மயங்கி
மதுவுண்டு நீராடும் போதுவரு நாரத
மகாமுனியை மதிக்காமையின்
தருசாப மருதமரமாய்நந்த கோபனின்
தலைவாசல் வளருங்காலம்
தயிருண்ட கள்வனென் றுரலுடன் யசோதைத்
தனிக்கயிற்றினாற் பிணிக்க (தாய்
ஒருகயிறு காணுமல் பலகயிறு முடிந்தாலும்
உதரம் பருத்து நின்றாய்
ஒப்பரிய தாய்க்காக உடல்சிறுத் துரலிழுத்
துறுசாபம் தீர்த்த பகவா
திருமகளை மார்பில் வைத் தரவிலுறை கேசவா
சிறுபறை முழக்கியருளே
செல்வநர கேஸ்வரச் சிங்காரக் கண்ணனே
சிறுபறை முழக்கியருளே.

தவசத்திய விரதனெனும் மன்னனின் புத்திரன்
சங்கசூடணனை வெஃகி
தழுவும்ஆனந்தகுரு மகள் சுமுகி என்பவள்
தனிக்காதல் கொண்டு நண்ண
கவன குருமகள்நீஎன் சோதரியென் றகன்றனன்
கற்பழித் தானென் றழுது
கன்னிமுறை யிடமன்னன் கட்டளையினேவலர்
கைகாலைத் துணித்தபோதில்
"புவனத்தில் உனைப்பழி யுரைத்தவள் வஞ்சனை
பொருந்து சூர்ப்பநகையாக
புனிதனே நீவிபீஷணனாக நற்றவர்கள்
போற்றிடும் ஆதிசேடன்

திவள் இலக்கு வனாய்வருக அருள்செய்வேன்'' என்
சிறுபறை முழக்கியருளே (றவா
செல்வநா கேஸ்வரச் சிங்காரக் கண்ணனே
சிறுபறை முழக்கியருளே.

சங்குசக் கரமேந்தும் கண்ணனே அன்பர்தம்
தவப்பயன் தருங்கண்ணனே
தன்னைத் திருந்தாமல் பிறர்பழி யுரைப்பவர்
தகைமைபார்த் திடுங்கண்ணனே
துங்கமிகு மக்களின் மனைவியின் குரவரின்
துதித்திடும் தந்தை தாயின்
சொற்கடமை செய்யாது நன்றிகொன் றோரின்
தொடரைஎழு தூங்கண்ணனே (வினைத்
ஐங்கர சிவாயநம சத்தியுமை நாரணா
அருள்முருக என்று நாவில்
ஆனந்த நீர்பெருக ஓதுநெறி வாழுவார்
அல்லல் அழிக் குங் கண்ணனே
செங்கழலி லிட்டமலர் சிவனடியில் காட்டினாய்
சிறுபறை முழக்கியருளே
செல்வநா கேஸ்வரச் சிங்காரக் கண்ணனே
சிறுபறை முழக்கியருளே.

கனவான வாழ்க்கையைக் கனமாய் நினைந்துநான்
காற்றிற்பஞ் சாகிடாமல்
கற்றகலைச் செல்வத்தை மற்றவர்கள் புகழ்சொல்
கானல்நீர்க் காக்கிடாமல் (லும்
சினமோடு கூடிடும் செயலால் அகங்காரச்
சேற்றிற் புதைந்திடாமல்
சீவரைக் கொல்லாமல் தீயநூல் கல்லாமல்
தெரிவையரின் பின் சொல்லாமல்

மனமோடும் போக்கெலாம் சென்றுதடு மாறிடும்
வாநரத் துயர்கொளாமல்
வழுவாத பேரின்பப் பழமேவு கற்பக
மலைவீடு தருமையனே
தினமூறு வாராது சிறியேமைக் காப்பவா
சிறுபறை முழக்கியருளே
செல்வநா கேஸ்வரச் சிங்காரக் கண்ணனே
சிறுபறை முழக்கியருளே.

ஏங்கினேன் அப்பனே இப்பிறவி விட்டபின்
என்னென்ன பிறவி வருமோ
என்னுவில் நமசிவய நாராயணாயநம
எந்தை ஓம் கணபதி மயில்
தாங்குசர வணபவா சிவ மனோன்மணிஎன்று
சந்ததம் பாடுகின்ற
சத்தியும் சித்தியும் தனையறியும் பத்தியும்
தமியனேன் பெற்றுய்வனோ
தூங்கியும் தூங்காதும் சும்மா விருக்கின்ற
சுகம்பெறுவ னோநின்திருத்
தொண்டருடன் சேர்வனோ சுத்தநிர்க்குணமான
சுடர்கண்டு மனங்குளிர்வனோ
தீங்கேதுமில்லாதென் வேண்டுதலுக் கருள்புரிந்து
சிறுபறை முழக்கியருளே
செல்வநா கேஸ்வரச் சிங்காரக் கண்ணனே
சிறுபறை முழக்கியருளே.

எத்தனை தெய்வங்கள் எத்தனை சமயநெறி
எத்தனை பூசைமுறைகள்
எத்தனை புராணங்கள் எத்தனை வேதங்கள்
எத்தனை சிவாகமங்கள்

அத்தனையும் நின்றுடைய பேதங்கள் போதனைகள்
அநுபூதியான நிலைகள்
அல்லென்று பகலென்று சொல்லமுடியாதென்ப
தறியாத கடைநாயினேன்
சத்தினை சித்தினை ஆனந்த அமுதினைச்
சாத்வீக குணத்தினின்று
சந்தித்து மூலத்தைச் சிந்தித்து கன்மவினைச்
சஞ்சலக் கடல் கடக்கும்
சித்தமெனும் ஓடம்வழி தப்பாமல் ஓடிடச்
சிறுபறை முழக்கியருளே
செல்வநாகேஸ்வரச் சிங்காரக் கண்ணனே
சிறுபறை முழக்கியருளே

(வேறு)

அரனே அழகா அரங்கேசா
அட்சரமெல்லாம் ஆயவனே
அன்புக் கடலே அருள்மலையே
அடியார் இருதய ஆலிலையில்
இரவும் பகலும் துயில்பவனே
எங்கும் கண்ணாய் இருப்பவனே
எழில்ருக் மணிசத் தியபாமா
இருவரும் அணைந்திடு நாயகனே
வரவும் செலவும் இல்லாத
மாயா ராமா கோவிந்தா
வறுமை நீங்க வளம்பெருக
வாய்மையும் நீதியும் நிலையோங்க
சிரமெனும் சமயப் பண்பாடு
செழித்திடச் சிறுபறை முழக்குகவே
தேன்சொரி நாகேஸ்வரம்வளர
திருமால் சிறுபறை முழக்குகவே

## 10. சிறுதேர்ப் பருவம்

வருந்துற்ற நூற்றுவர் மாண்டிடவும் பாண்டவர்
மனுநீதி யரசு பெறவும்
மாபா ரதத்திலே மாபாயி ரதம்விட்டு
வயம் பெறச் செய்த கிருஷ்ணு
விந்தைச் சரா சந்தன் விட்டுயிர் பிரிகின்ற
விதக்குறிப் புரைத்த கள்வா
வேதனைத் தொப்பூழ் விரிந்த கமலத்திலே
வீற்றிருக்கச் செய்தவா
சுந்தரப் புவிமாதைச் சூடிக் கொடுக்கின்ற
கோதையாய் அருள்புரிந்த
தூயனே செங்கமல வாயனே தத்துவம்
சொல்லுதற் கரியபரனே
சிந்தனையி லுனைக்கண்டு வந்தனை புரிந்திடச்
சிறுதேரு ருட்டியருளே
தென்னளவை நாகேஸ்வ ரக்கிருஷ்ண நாரணு
சிறுதேரு ருட்டியருளே.

நீர்பூத்த புவனங்கள் உருள, விண்ணண்டாங்கள்
நின்ருென்றை ஒன்றிழுத்து
நிலையாக வேயுருள நிலவுதா ரகையுருள
நிகழும்நவ கோளும்பிறவும்
பேர்பூத்த காலநெறி பிழையா தசைந்துருள
பிரபஞ்சபூத முருள

பேணுமெண் டிசையதிபர் தேவகுல யாவரும்
பெற்றதம் கடமைபூண்டு
சீர்பூத்த சீவரினம் செய்வினைப் பயன்கண்ட
சிருட்டிக்குத் தக்கபடியே
செல்வவறு மைச்சுகம் செய்தருள, செங்கையில்
திகிரியுருட்டும் ரமணனே
தேர்பூத்த ஏழ்பரியில் எழுபருதி வண்ணனே
சிறுதேருருட்டியருளே
தென்னளவை நாகேஸ்வ ரக்கிருஷ்ண நாரணா
சிறுதேரு ருட்டியருளே.

அன்பரினம் கொடியநோய்த் துன்பமுற் றருளா
ஆதிசிவன் வாய்மலர்ந்த (மல்
ஆரணமும் சிறப்பான ஆகமமும் அவையேணி
அனுட்டிக்கும் அந்தணர்களும்
இன்பவழித் திருமுறைகள் இதிகாச புராணங்கள்
இருடிகளி னனுபவத்தில்
எழுந்தவே தாந்தசித் தாந்தபோ தனைநூல்கள்
இனியதத் துவமுணர்த்தும்
பொன்பெருகு மாழ்வாரின் பிரபந்த வாய்மொ
போற்றிடும் புண்ணியர்களும் (ழிகள்
புன்னெறிக் குருளாமல் இலக்குமணன் எனும்
புளியமர மா,க அதன்கீழ் (தம்பி
தென்பதிக் குருகூரில் திருக்கோயில் கொண்டவா
சிறுதேரு ருட்டியருளே
தென்னளவை நாகேஸ்வ ரக்கிருஷ்ண நாரணா
சிறுதேரு ருட்டியருளே.

கருக்கவலை தீர்க்கவரும் வேதசா ரன்நாமக்
    கன்னியனின் புதல்வியாகி
கமலா வதிக்கன்னி கண்ணனே நீ எனது
    கணவனாய் வருக எனவே
உருக்கமிகு தவமாற்ற உவந்துபிர சன்னமாய்
    உற்றமணம் பூண்ட தேவா
ஊறுபுரிந் திடும்அச்ம சாரனெனும் அசுரனின்
    உந்துகா லைப்பிடித்து
பெருக்கமிகு சமர்செய்து செருக்கழித் தமரர்
    பேசரிய மாயமியற்றிப் (தொழப்
பெருவெற்றி கொண்டுலகில் வெகுமாயக் கூத்த
    பெயர்தாங்கி மாண்புயர்ந்த (னெனும்
திருக்குளந் தைப்பதியில் திகழ்ஸ்ரீநி வாசனே
    சிறுதேரு ருட்டியருளே
தென்னளவை நாகேஸ்வ ரக்கிருஷ்ண நாரணா
    சிறுதேரு ருட்டியருளே.

பத்துத் தலைக்கசடன் சத்திச் சிறப்புடைய
    பங்கயச் சீதை தன்னைப்
பற்றுது சிறைவைத்த பழிகேட் டிலங்கையில்
    பாதம்வைத் தமர்தொடுக்கக்
கொத்துவா னரமுடன் குலவுசே தணைகட்டிக்
    குணமுனிவர் கண்ணுவர்க்குக்
குறிவைக்கும் வில்கொடுத் தசுவத்த மரநிழலில்
    கோயில்கொண் டடியர்க்காகத்
தத்துவத் தர்ப்பச யனத்திலுறை இராமனே
    சக்கரம் இரத்னகரம்
தண் ஹேம தீர்த்தமுடன் ஸ்ரீராம நாதபுரம்
    தங்குதச ரதகுமாரா

சித்தந்தி லுனதுபத முத்திரை பதிந்திடச்
சிறுதேரு ருட்டியருளே
தென்னளவை நாகேஸ்வ ரக்கிருஷ்ண நாரணா
சிறுதேரு ருட்டியருளே.

மாதவர் துதிபாஞ்ச சைன்னியம் பொய்கையார்
வலியகதை பூதத்தாழ்வார்
வாட்படை பேயாழ்வர் வளைதிகிரி மழிசையார்
வைநதேய யாம்சம்தினம்
ஓதுதமிழ் மதுரகவி வீர சே நாம்சமென்
றுதித்தநம் மாழ்வார் அருள்
உற்றகௌத் துவம்குல சேகரர் கருடாம்சம்
ஓங்குபெரி யாழ்வார் வளர்
பூதலத் தேவியாம் கோதைப் பிராட்டியார்
புனையும்வன மாலையம்சம்
புகல்தொண்டரடிப்பொடியர் ஸ்ரீவத்சம் திருப்
பொலி சார்ங்கம் மங்கைய ரெனச் (பாணர்
சீதரா நினது திறன் நாமறியத் தந்தனை
சிறுதேரு ருட்டியருளே.
தென்னளவை நாகேஸ்வ ரக்கிருஷ்ண நாரணா
சிறுதேரு ருட்டியருளே.

மண்ணென்று பொன்னென்று மனையென்று வழு
மனைவிதரு மக்களென்று (வாத
மருவுபத விகளென்று பிரியாத இனமென்று
மகிழ்வான நண்பரென்று
கண்ணினாற் கண்டதும் காதினாற் கேட்டதும்
கதியென்று மதி மயங்கி
கற்பனைக் கோட்டையில் காலத்தை வீணாக்கிக்
கடற்கரைத் தாழையானேன்

புண்ணியத் தலமெலாம் போற்றவும் திருநீறு
பூசிச் செபம் செய்யவும்
பொங்குதமிழ் அருட்கவிக் கவிமாலை புனையவும்
பொலிகருணை புரிந்த துரையே
திண்ணமிகு சதுர்மறைச் சக்கர மிணைத்தமணிச்
சிறுதேரு ருட்டியருளே
தென்னளவை நாகேஸ்வ ரக்கிருஷ்ண நாரணா
சிறுதேரு ருட்டியருளே.

அப்பனே வைகுந்த வாசனே அன்பருக்
கன்பனே ஞான முதலே
அன்றுநர சிங்கமாய் நின்றபிர கலாதனுக்
கருள் செய்த கருண முகிலே
இப்பிறப் பிற்கற்ற கல்வியும் கல்வியால்
இதயம் படிந்த அறிவும்
இரவுபகல் நினைநினைந் தேத்திமகிழ் பூசையும்
இயலிசை பாடிப்பாடி
எப்பொழுது முன்னடிகள் மறவாத சிந்தனையும்
இலங்குபரஞ் சோதிகாட்டும்
ஈரைந்து வாயுவட னோரைந்து புலன் குவியும்
இன்பமும் வேண்டி நின்றேன்
செப்புமிவ் வரமெலாம் யன்ளித்தரும் தெய்வமே
சிறுதேரு ருட்டியருளே.
தென்னளவை நாகேஸ்வ ரக்கிருஷ்ண நாரணா
சிறுதேரு ருட்டியருளே.

தந்தைதாய் மூத்தோர்கள் சான்றோர்கள் குரவர்கள்
சாற்றுநன் மொழி கொளாமல்
தட்டிக் கழித்திடும் பித்தரின் காலம் மூது
சமயநெறி பற்றிடாமல்

நிந்தை செய் தெனது நான் என்றுபல கொடுமை
நினைத்தபடி செய்யுங் காலம் (கள்
மந்திமனை தேடாமல் மற்றவர் மனையழிக்கும்
வகைமனக் கயவர் காலம்
மனுதர்ம மில்லாத காலத்தில் வாழ்ந்துனது
மலரடியெப் படிப்பிடிப் பேன்
சிந்தைதெளி தெய்வீக சந்ததி செழித்திடச்
சிறுதேரு ருட்டியருளே
தென்னளவை நாகேஸ்வ ரக்கிருஷ்ண நாரணா
சிறுதேரு ருட்டியருளே

உத்தம மகா முனிவர் நித்ததவம் பலகோடி
ஒருகாலில்என்பு முருகி
உண்ணாது பருகாது வன்மீக புற்றெழுந்
துறுத்தியும் காண்பரியனே
பித்தனேன் நின்னுமம் பேசிவளர் ஞானியரின்
பெயர் கூறும் தகுதியுமிலேன்
பிரகாச மானநின் பாதத்தில் மலர் சாத்திப்
பிணிநீங்க அருள் பெறுவனோ
மத்துறுங் கயிறென்ற மதிகொண்ட கடையனேன்
மலவிருட் துயரம் நீங்க
வகையின்றி யுருள்கிறேன், ஆதாரப் படியேறி
மலர் தூல வைகரியிலே
சித்திரச் சிவசோதி முத்திரை தெரிந்திடச்
சிறுதேரு ருட்டியருளே
தென்னளவை நாகேஸ்வ ரக்கிருஷ்ண நாரணா
சிறுதேரு ருட்டியருளே.

சுபம்

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 12 | 4 | செழுங்கீரை | செங்கீரை |
| 13 | 19 | முகந்தனே | முதந்தனே |
| 16 | 3 | விதியைஃதுக்கும் | விதியைவகுக்கும் |
| 19 | 8 | இனிதாண்டான் | இனிதாண்டார் |
| 21 | 10 | மனத்துங்கினித்த | மனத்துக்கினித்த |
| 23 | 21 | சூலத்தன் | சூலத்தள் |
| 24 | 26 | நாயகர் | நாயகா |
| 27 | 19 | ஐயமேற்ற | ஐயமேற்று |
| 30 | 5 | தீர்ப்பதற்கும் | தீர்ப்பதற்குப் |
| 31 | 7 | நிழள் | நிழல் |
| 32 | 9 | மலவரன் | மலரவன் |
| 32 | 24 | விண்ணரம் | விண்ணகரம் |
| 33 | 8 | சேருக்கி | சேறுக்கி |
| 35 | 1 | நின்னகத் | நின்கைத் |
| 38 | 25 | இணேயோய் | இளேயோய் |
| 40 | 2 | அவனவவேர் | அவனலவோ |
| 49 | 21 | குருமகன் | குருமகள் |
| 50 | 28 | சொல்லாமல் | செல்லாமல் |
| 53 | 17 | விண்ணண்டாங்கன் | விண்ணண்டங்கள் |
| 56 | 5 | பாஞ்சகைன்னியம் | பாஞ்சசைன்னியம் |



அச்சுப்பதிவு:
பாலா அச்சகம், காரைநகர். போன்: 24